வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 03.08.2022 புதன்கிழமை | இதழ் : 239 | பக்கங்கள் : 16




வரலாற்று பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்றம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது....!

(மேலும் செய்தியும் படங்களும் பக்கம் 16இல்)

## கூட்டமைப்பு பங்காளியாக வேண்டும் அமையவுள்ள அனைத்துகட்சி அரசில்!

### அமைச்சர் நிமால் அழைப்பு

கொழும்பு, ஓக. 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமையவுள்ள சர்வகட்சி அரசாங்கத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியில் இருந்து ஆதரவு மாத்திரம் வழங்காமல் அதில் பங்காளியாக இணைய வேண்டும்." - இவ்வாறு அழைப்பு விடுத்தார் அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தெரிவித்தார்.

நேற்று துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சராக பதவியேற்ற பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே மேற்படி கூறினார்.

மேலும், "பொருளாதாரம், அரசியல் என அனைத்துத் தேசிய பிரச்னைகளுக்குத் தீர்வுகாண சர்வ 15

## அமைச்சரானார் நிமால் சிறிபால!

கொழும்பு, ஓக. 03

நிமால் சிறிபால டீ சில்வா நேற்று செவ்வாய்க்கிழமை மீண்டும் அமைச்சராக பதவியேற்றுக் கொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் துறைமுகம் மற்றும் விமான சேவைகள் அமைச் 15

# கூட்டமைப்பு, ஐ. ம. சக்தியினரை இன்று சந்திக்கிறார் ஜனாதிபதி!



**கொழும்பு, ஓக. 03**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.**

**சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பிலேயே இந்த சந்திப்பில் பேசப்படவுள்ளது.**

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பான பேச்சை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று ஆரம்பித்தார்.

முதல் சந்திப்பு சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி மற்றும் அதனுடன் இணைந்து இயங்கும் கட்சிகளின் தலைவர்களுடன் இடம்பெற்றது. இரண்டாவது சந்திப்பு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியுடனும், மூன்றாவது சந்திப்பு எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் கட்சியுடனும் இடம்பெற்றது.

இந்நிலையில் இன்று புதன்கிழமை மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சக்தி, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினரை ஜனாதிபதி சந்தித்துப் பேசவுள்ளார். இந்தப் பேச்சுகளுக்கு குறித்த கட்சிகளின் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்த இரு கட்சிகளுடனான - குறிப்பாக எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடனான சந்திப்பு நாட்டின் அரசியலில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்டுத்தியுள்ளது.

ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது சர்வகட்சி அரசாங்கம் அமைத்தல், 15

## நல்லூர் திருவிழாவுக்கு வருவோர் நகைகள், பணத்தை தவிர்க்கவும்!

யாழ்ப்பாணம், ஓக. 03

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவில் பங்கேற்கும் அடியவர்கள் தங்க நகைகள் மற்றும் பணத்தை எடுத்துச் செல்வதைத் தவிர்க்குமாறு யாழ்ப்பாணம் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்துடன், வீட்டில் ஒருவராவது தங்கியிருப் 15

## பாலியல் குற்றவாளிகளுக்கு 10 வருடங்கள் கடூழிய சிறை!

### நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

வவுனியா, ஓக. 03

வவுனியா - நெளுக்குளத்தில் பெண் ஒருவர் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்திய இருவக்கு தலா 10 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன்.

நேற்று செவ்வாய்க்கிழமை இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டபோதே நீதிவான் மேற்படி தண்டனையை விதித்தார். அத்துடன், குற்றவாளி 15

## கொரோனா பலி 7ஆக உயர்ந்தது!

கொழும்பு, ஓக. 03

கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் 7 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

30 - 59 வயதுக்கு இடைப்பட்ட இரு பெண்களும், 60 வயதுக்கு மேற் 15

### ஈஸ்டர் தாக்குதல் வழக்கு:

## ரணில் பெயரை நீக்குவதா? வழக்கு தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக. 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பிரதிவாதியாகப் பெயர் குறிப்பிடப்பட்ட வழக்கிலிருந்து அவரை நீக்குவதா? அல்லது இல்லையா என்பது தொடர்பான வழக்கு தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களை தடுத்து நிறுத்த தவறியமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களில், பிரதிவாதியாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயரும் உள்ளது. 15

## வெள்ளி விடுமுறை இனிமேல் இல்லை!

கொழும்பு, ஓக. 03

அரச அலுவலகங்களை வெள்ளிக்கிழமைகளில் மூடுவது தொடர்பில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய செய்தியாளர் சந்திப்பில்

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார். 15

## 3ஆவது கூட்டத் தொடருக்காக இன்று கூடுகிறது பாராளுமன்று

### ஜனாதிபதியின் உரையும் இடம்பெறும்

கொழும்பு, ஓக. 03

மூன்றாவது கூட்டத் தொடருக்காக இன்று புதன்கிழமை பாராளுமன்றம் கூடுகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சம்பிரதாயபூர்வமாக இந்தக் கூட்டத்தொடர் ஆரம்பமாகும் என்று பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிய அமர்வு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பமாவ 15

## விக்னேஸ்வரன் அமைச்சரானால் 'விக்கி கோ கொழும்பு' போராட்டம்

### அவரின் கட்சி பேச்சாளரே அறிவிப்பு

கொழும்பு, ஓக. 03

"ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான சர்வகட்சி அரசாங்கத்தின் அமைச்சரவையில் விக்னேஸ்வரன் அங்கம் வகித்தால் "விக்கி கோ கொழும்பு" என்ற கோஷத்தை எழுப்பும் முதல் ஆளாக நானே இருப்பேன்", என தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகப்பேச்சாளர் அருந்தவபாலன் தெரிவித்தார்.

தென்மராட்சி 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

கூட்டமைப்பின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கிய பற்றி, மற்றுமொரு கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் பலரின் கவனத்தையும் பெற்றிருக்கின்றன.

இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் சாணக்கிய போட்டியிட்டவர் என்பது இரகசியமானதல்ல.

அது தனது அறியாப் பருவத்தில் தான் செய்த தவறு என்றும், இப்போதுதான் மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்குச் செய்த கொடுமைகள் பற்றி அறிந்துகொண்டவர் போலவும் அவர் அரசியல் நடத்துவதும் ஒன்றும் இரகசியமானதல்ல.

ஆனால், அவர் இப்போதும் மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்பில் இருக்கிறார் என்றும், அவருக்கு மகிந்த தரப்பிலிருந்து கிடைத்த செய்தி பற்றியும் சுமந்திரன் அண்மையில் பகிரங்க மேடையில் தெரிவித்திருக்கிறார்.

“நாட்டில் போராட்டம் ஆரம்பமானபோது ராஜபக்ஷ குடும்பத்தில் ஒருவர் கூறினாரென சாணக்கியனுக்கும் எனக்கும் ஒரு செய்தி வந்தது. அவர் என்ன கூறினார். அதாவது, இந்தப் போராட்டத்தை கட்டுப்படுத்த முடியாவிட்டால் எம்மிடம் ஒரு திட்டம் உள்ளதாக எமக்கு தெரிவித்தார். அந்த திட்டமானது ரணில் விக்கிரமசிங்கவிடம் பதவியை வழங்குவோம். அவர் அதைப் பத்திரமாக வைத்திருந்து எம்மிடம் திருப்பி தருவார். இந்த விடயம் மகிந்த ராஜபக்ஷ இராஜிநாமா செய்வதற்கு 3 கிழமைக்குள் எமக்கு கிடைத்த தகவல் ஆகும். சாணக்கியனுக்குதான் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. சாணக்கியனே எனக்கு சொன்னார்.” -இதுவே சுமந்திரன் தெரிவித்த கருத்து.

இந்த வியடம் நமக்கு பல விடயங்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்திருக்கின்றது.

மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் தமது மிக அந்தரங்கமான அரசியல் விடயங்களையும் சாணக்கியனுடன் பகிர்ந்துகொள்ளும் அளவுக்கு அவர் அவர்களுடன் நெருக்கமாக இருக்கிறார்.

அப்படியெனில் கூட்டமைப்பு எமது தமிழ் மக்களின் அரசியல் விடயங்கள் தொடர்பாக நகர்த்தும் இரகசிய விடயங்களையும் அவர் மகிந்த தரப்புக்கு சொல்லுவாரா என்ற கேள்வி எழுவதையும் தவிர்க்க முடியவில்லை.

ஒரு தேர்ந்த அரசியல்வாதியாக மக்களால் நம்பப்படும் சுமந்திரன், இதுபோன்ற தகவலை ஏன் பொதுவெளியில் பகிரங்கமாக சொன்னார் என்பது அவருக்கு மாத்திரமே வெளிச்சமானது.

ஆனால், ஒன்று மட்டும் புரிகின்றது, அண்மைக்காலமாக அவர் சற்று குழப்படைந்திருக்கிறார் என்பதே அது. இப்போது, அவர் இவ்வாறு கூறியதல்ல விடயம். அவர் மகிந்த தரப்பின் தகவல் என்று முன்வைத்திருக்கின்ற செய்தியே கவனத்திற்குரியது.

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு சில வாரங்கள் முன்னதாக வெளிவந்த பத்திரிகைகளை புரட்டிக்கொண்டிருந்தபோது, மைத்திரியைப் பற்றிய செய்திகளையே படிக்க முடிந்தது.

காலையில் அப்பம் சாப்பிட்டுவிட்டு மாலையில் அங்கே போனார், மோடி ஸ்ரைலில் கோட் போடத் தொடங்கியிருக்கிறார். அவரின் இந்த உடை மாற்றத்தின் பின்னால் சந்திரிகா இருக்கிறார் என்றெல்லாம் அந்தச் செய்திகள் விபரித்தன.

அப்போது மகிந்த என்ற மலையை விழுத்த ஒரு நபர் தேவைப்பட்டார். அது அவரின் அணியிலிருந்தே வந்தது எதிரணியினருக்கு சுலபமானது. ஆனால், அவர் மகிந்த அணியிலிருந்து வந்தவர் என்பதற்கு அப்பால், அவர் அந்தப் பதவிக்கு பொருத்தமானவரா? அல்லது ரணில் போன்ற ஒரு தலைவருடன் அவரால் பயணிக்க முடியுமா என்பதைப் பற்றியெல்லாம் யாரும் சிந்தித்திருக்கவே இல்லை.

அதனால்தான், ஜனாதிபதியாக வெற்றிபெற்று அந்த ஆசனத்தில் அவரால் அமரமுடிந்தபோதிலும், ரணில் போன்ற ஒருவருடன் தொடர்ந்து ஒற்றுமையாகப் பயணிக்க அவரால் முடியவில்லை.

மைத்திரி - ரணில் அரசு தத்தமக்குள் மோதிக்கொண்டு இருந்தபோது, மகிந்த ராஜபக்ஷ தரப்பு எதிரணியாக மீண்டு எழுந்தது. அப்போது கோட்டாபய ராஜபக்ஷ, மீதான எதிர்பார்ப்பு மைத்திரியை விட அவர் சிறப்பாக செய்வார் என்றவாறே இருந்தது.

மைத்திரியின் காலத்தில் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் கோட்டாபய மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரிக்கச் செய்தது.

ஆனால், கோட்டாபய ஆட்சிக்கு வந்தால் மீண்டும் வெள்ளை வான் கலாசாரம் நாட்டில் தலையெடுக்கும், படுகொலைகள் இடம்பெறும் என்றவாறு பிரசாரம் செய்யப்பட்டது.

ஆனால், நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண, கோட்டாபயவால் முடியாதபோது, அவரின் அரசியல் அனுபவமின்மை வெளித்தெரிய தொடங்கியது.

கோட்டாபயவே சொன்னதுபோல ஒரு தோல்வியடைந்த தலைவராக அவர் வெளித்தெரிந்தபோது, மைத்திரி பரவாயில்லை என்ற எண்ணப்போக்கு பலருக்கும் தோன்றியது.

இப்போது, கோட்டாபய இல்லை. அவரின் கதிரையில் அமர்ந்திருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க, தனது அரசியல் ஆட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்.

கோட்டாபய ஆட்சிக்கு வந்தால், இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ அவையெல்லாம் இப்போது ரணில் ஆட்சிக்கு வந்தபின்னர் நடக்கின்றன. அவசரகாலச் சட்டத்தின் கீழ் நடக்கும் கைதுகள் இப்போது கோட்டாபய பரவாயில்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றன.

மகிந்தர், சாணக்கியனுக்கு சொன்னதுபோல சம்பவங்கள் நடக்கின்றவோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.!

- ஊர்க்குருவி.

## ஜனாதிபதி செயலகத்துக்குள் முதலில் நுழைந்தவர் கைது!

கொழும்பு, ஓக. 03

ஜூலை மாதம் 9 ஆம் திகதி காலிமுகத்திடலில் இடம்பெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது ஜனாதிபதி செயலகத்துக்குள் முதன்முதலாக அத்துமீறி நுழைந்த நபர் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், காலிமுகத்திடலில் இடம்பெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்திற்குள் அத்துமீறி நுழைந்தமை மற்றும் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர் 38 வயதுடைய பன்னிப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் குறித்த ஆர்ப்பாட்டத்தின் போது கத்தியை கொண்டு பாதுகாப்பு கடமையில் இருந்த உத்தியோகத்தரை அச்சுறுத்தியுள்ளார்.

அதன் பின்னர் போராட்டகாரர்கள் செயலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து உள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## தெய்வீக திருக்கூட்ட தொடரில் இன்று!

நல்லூர், ஓக. 03

நல்லைக் கந்தன் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் சிறப்பு தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நடக்கிறது.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாடு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இணை அனுசரணையில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தக் கூட்டத் தொடரில் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளன.

திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடக்கும் இந்த நிகழ்வில் நல்லை ஆதின முதல்வச ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் ஆசியுரை வழங்குவார்.

யாழ்ப்பாணம் ஸ்ரீவதிரிபீட விநாயக அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஜனை, மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன், நாவலர் பெருமான் - கலியுகத்தில் நமக்கு வழிகாட்டிய அவதாரம் என்ற தலைப்பில் சிறப்புரையை இலக்கிய கலைமணி சி. கணேஷ்குமார் வழங்குவார். தொடர்ந்து, செல்வி ஜீவிதா ஆனந்தராசாவின் மாணவிகளின் நடன நிகழ்வு, கணேஷ்குமார் கஜானன், காருண்யா கணேஷ்குமார் ஆகியோரின் சங்கீத கச்சேரியும் இடம்பெறும்.

## யாழ்.குளப்பிட்டி எரிபொருள் நிலையம் அருகில் மோதல்!

### புடைவை விற்பனை நிலையம் சேதம்

யாழ்ப்பாணம், ஓக. 03

யாழ்ப்பாணம் கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் அப்பகுதியில் உள்ள புடைவை விற்பனை நிலையமொன்று சேதமாக்கப்பட்டுள்ளது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக காத்திருந்தவர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் குறித்த விற்பனை நிலையம் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவத்தில் குறித்த விற்பனை நிலையத்தின் கண்ணாடிக் கதவுகள் அடித்து நொருக்கப்பட்டுள்ளதுடன் குறித்த புடைவை விற்பனை நிலையத்தின் உரிமையாளரும் தாக்குதலுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் புடைவை விற்பனை நிலைய உரிமையாளரினால் யாழ்ப் பாணம் பொலிஸில் முறைப் பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

## பெண் பொலிஸ் உத்தியோகத்தரை கடத்தி செல்ல முயன்ற மூவர் கைது

கொழும்பு, ஓக. 03

வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தரை பலவந்தமாக காருக்குள் ஏற்றி கடத்திச் செல்ல முயற்சித்த இரண்டு பெண்கள் உட்பட மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பன்பொல பிரதேசத்தில் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சுமார் 7 கிலோ மீற்றர் தூரம் காரை துரத்திச் சென்று அதனை நிறுத்துவதற்காக பொலிஸார் காரின் பின்னால் உள்ள சக்கரத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

காருக்குள் இருந்து 6 கிராம் ஹெரோயின் போதைப் பொருளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

காரில் கடத்திச் செல்லப்பட்ட பெண் பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்த நிலையில், அம்பன்பொல வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக 35 வய தான ஆணும், 22 மற்றும் 45 வயதான பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

## நிதி ஆதாரத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் தேவையில்லை!

கொழும்பு, ஓக. 03

இலங்கையர்கள் அமெரிக்க டொலர் உள்ளிட்ட வெளிநாட்டு நாணயங்களை வர்த்தக வங்கியின் ஊடாக ரூபாவாக மாற்றுவதற்கு பொது மன்னிப்புக் காலத்தை அறிவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடக சந்திப்பில் வைத்து அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன இந்த விடயத்தை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த விடயம் குறித்த சுற்றறிக்கை நிதி அமைச்சினால் இன்னும் ஓரிரு நாட்களில் வெளியிடப்படும்.

இதன்படி பிரஜைகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய எந்தவொரு வெளிநாட்டு நாணயத்தையும் வர்த்தக வங்கியின் ஊடாக ரூபாவாக மாற்ற முடியும்-என்றார்.

இதேவேளை இணை அமைச்சரவைப் பேச்சாளர் மனுஷ நாணயக்கார தெரிவிக்கையில்,

10000 அமெரிக்க டொலர்களுக்கு அதிகமான வெளிநாட்டு நாணயங்களை இந்த காலப்பகுதியில் மாற்றவோ அல்லது கணக்கில் வைப்பிலிடவோ முடியும்.

இந்த காலகட்டத்தில் தனிநபர்கள் நிதி ஆதாரத்தை நிரூபிக்க எந்த ஆவணத்தையும் வங்கிகளிடம் சமர்ப்பிக்க கோரப்படமாட்டார்கள்.

கடந்த மாதமும் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட போதிலும் பொது மன்னிப்புக் காலம் ஒரு மாதத்திற்கு நீடிக்கும்.

இதனடிப்படையில் பிரஜைகள் பொதுமன்னிப்புக் காலத்தை பயன்படுத்தி தமது வெளிநாட்டு நாணயங்களை வங்கி அமைப்பில் வைப்பிலிட முடியும்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
03.08.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஆடி 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பொன்சேகாவின் அவதாரம்?

பொன்சேகா, அரசியலில் புதிய அவதாரமொன்றை எடுப்பதற்கான நகர்வுகளில் ஈடுபட்டு வருகின்றார். ராஜபக்ஷக்களின் நம்பிக்கைக்குரிய தளபதியாக இருந்து, இறுதி யுத்தத்தை வழிநடத்திய பொன்சேகா, உள்முரண்பாடுகளின் காரணமாக, ராஜபக்ஷக்களுக்கு எதிராக அரசியலுக்குள் பிரவேசித்தார். 2010 ஜனாதிபதி தேர்தலில், மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் களமிறங்கி தோல்வியடைந்தார். யுத்த வெற்றிவாதத்தை பங்கு போடுவதன் மூலம் ராஜபக்ஷக்களை தோற்கடிக்கும் வியூகத்திற்கே பொன்சேகா பயன்படுத்தப்பட்டார். ஆனால், எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடியவில்லை. கூட்டமைப்பின் வெளிப்படையான ஆதரவுதான் அவரின் மோசமான தோல்விக்குக் காரணமென்று இப்போதும் பல சிங்களவர்கள் நம்புகின்றனர்.

ராஜபக்ஷக்களால், தென்னிலங்கையில் அதிகம் பாதிக்கப்பட்டவர் என்றால் - அது நிச்சயமாக சரத் பொன்சேகா என்பதில் ஐயமில்லை. ஏனெனில், மகிந்த ராஜபக்ஷ பொன்சேகாவை சிறைப்படுத்தி, அவரின் குடியுரிமையையும் இல்லாமலாக்கினார். 2015 ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பொன்சேகாவுக்கு வாழ்வளித்து, 2016இல் தேசியப் பட்டியல் மூலம், பாராளுமன்றத்திற்குள்ளும் பிரவேசித்தார்.

அடிப்படையில் பொன்சேகாவே இறுதி யுத்தம் தொடர்பான சகல குற்றசாட்டுக்களுக்கும் பதிலளிக்க வேண்டியவர். ஏனெனில், இறுதி யுத்தம் அவரின் கட்டுப்பாட்டில்தான் வழிநடத்தப்பட்டது. ஆனால், 2010 ஜனாதிபதி தேர்தலில், தமிழ் மக்களின் ஆதரவை பெற்றதால், மிகவும் தந்திரமாக, போர் குற்றங்கள் தொடர்பான சர்வதேச பார்வையிலிருந்து தன்னை விலக்கிக்கொண்டார். ஆனாலும் இலங்கை இராணுவத்தின் மீதான எந்தவொரு குற்றச்சாட்டுக்களையும் பொன்சேகா ஏற்றுக்கொண்டதில்லை. அதேவேளை, இனப்படுகொலை குற்றச்சாட்டை தொடர்ந்தும் வலுவாக எதிர்த்துவரும் பொன்சேகா, அவ்வாறானதொரு குற்றம் இடம்பெற்றிருப்பின், தமிழ் மக்கள் எவ்வாறு தனக்கு வாக்களித்திருக்க முடியுமென்னும் கேள்வியை முன்வைத்து, தமிழ்த் தேசியவாதிகளின் குரல்களை பலவீனப்படுத்தி வருகின்றார். தர்க்க ரீதியில் நோக்கினால் பொன்சேகாவின் வாதம் பலமானது. இதனை அப்போது கூட்டமைப்பினரால் புரிந்துகொள்ள முடியவில்லையா?

அரசியலில் பொன்சேகாவால் பெரியளவில் வெற்றி பெறமுடியவில்லை. பிரதான கட்சிகளை சார்ந்துதான் அவர் அரசியலைக் கையாள வேண்டியிருக்கின்றது. இந்த நிலையில்தான், பொன்சேகா புதியதோர் அவதாரத்தை எடுக்க முயற்சிக்கின்றார். அதாவது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான போராட்டக்காரர்களின் (அறகலய) ஆதரவுடன் தன்னை அரசியலில் புதிதாக ஸ்தாபித்துக் கொள்ள முயற்சிக்கின்றார். காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் எந்தவோர் அரசியல்வாதியையும் அனுமதிக்கவில்லை. ஆனால், சரத் பொன்சேகாவை பேசுவதற்கு அனுமதித்திருந்தனர். இந்தப் பின்னணியில்தான், தற்போது ரணில் விக்கிரமசிங்கவை வீட்டுக்கு அனுப்பும் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக சூளுரைத்திருக்கின்றார்.

இதிலுள்ள முக்கியமான விடயம், போராட்டக்காரர்களின் அரசியல் பொன்சேகாவின் வசமாகப் போகின்றது. ராஜபக்ஷக்களுக்கு எதிரான போட்டத்தை தன்வசப்படுத்தினால், அதன் மூலம் புதியதோர் அரசியல் அவதாரத்தை எடுக்கலாமென்று பொன்சேகா ஒரு கணக்கைப் போடுகின்றார். அவர், கணக்கில் வெற்றிபெறுவதும் தோல்வியடைவதும் அவரின் பிரச்னை. ஆனால், ஒரு விடயம் மட்டும் உண்மை. அதாவது, இப்போது நடைபெறும் எந்தவொரு விடயமும், தமிழ் மக்களின் நலன்களுடன் தொடர்பானதல்ல. தமிழ் மக்களுக்கு இப்போதைய தென்னிலங்கை அரசியல் நகர்வுகளில் ஒரு விடயமுமில்லை. எனவே, எவர் கொழும்பின் அதிகாரத்தை கைப்பற்றினாலும் அவர்களுடன் முட்டி மோதும் அரசியலே தமிழ் மக்களுக்கு எஞ்சப் போகின்றது.

# இந்தியா - இலங்கை உறவில் விரிசல்!

*(இந்திய ஊடகமான விகடனின் பார்வை)*

*கடந்த சில தினங்களாக, அயல் நாடான இலங்கைக்கு சீனாவின் உளவுத்துறைக் கப்பல் ஒன்று வருவதாகச் செய்திகள் பரவிக்கொண்டிருந்தன. இந்த நிலையில், தற்போது அந்தக் கப்பல் வருவதை இலங்கை இராணுவம் உறுதிசெய்திருக்கிறது. எதற்காக அந்த உளவுக் கப்பல் இலங்கைக்கு வருகிறது. இதனால் இந்தியாவுக்கு என்ன பாதிப்பு?*

*ஜூலை 13ஆம் திகதி அன்று சீனாவிலிருந்து கிளம்பிய ஹயுவான் வாங் - 5“ என்ற உளவுக் கப்பல் தாய்வான் நாட்டைக் கடந்து இந்தியப் பெருங்கடலில் பயணித்துக்கொண்டிருக்கிறது. அந்தச் சமயத்திலேயே, இந்தக் கப்பல் இந்த மாதம் இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரும் என்ற தகவல் வெளியானது. அப்போதே இது தொடர்பாகக் கவலை தெரிவித்திருந்தது இந்தியா. ஆனால், அப்போது இந்தத் தகவலைத் திட்டவட்டமாக மறுத்த இலங்கை அரசு, இப்போது அந்தக் கப்பலுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது.*

*ஜூலை 30 அன்று, சீனக் கப்பலின் வருகையை உறுதி செய்திருக்கிறார் இலங்கை பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் கேணல் நளின் ஹேரத். இது தொடர்பாக அவர், ஹஹஇலங்கை கடற்பரப்பைக் கடந்து செல்ல, பல நாடுகளின் வர்த்தக, இராணுவக் கப்பல்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அதேபோல, சீனாவின் “யுவான் வாங் - 5“ ஆராய்ச்சிக் கப்பலை, இலங்கையின் அம்பந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்திவைக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்தக் கப்பல் ஓகஸ்ட் 11 முதல் ஓகஸ்ட் 17 வரை அம்பாந்தோட்டையில் நிறுத்தி வைக்கப்படும். அங்கிருந்து செயற்கைக்கோள் கட்டுப்பாடு குறித்த ஆராய்ச்சிகள், இந்தக் கப்பல் மூலம் மேற்கொள்ளப்படும்” என்று கூறியிருக்கிறார்.*

*இலங்கை அரசு இந்தக் கப்பலுக்கு அனுமதி வழங்கி யதால், மத்திய அரசு கடும் அதிருப்தியில் இருப்பதாகத் தெரிகிறது. சீனாவின் இந்த ஹயுவான் வாங் - 5“ உளவுக் கப்பல், 750 கி. மீ. தூரம் வரையிலுள்ள பகுதிகளை உளவு பார்க்கும் எனச் சொல்லப்படுகிறது. அந்த வகையில் தமிழ்நாட்டிலுள்ள சில முக்கிய இடங்களையும், ஆந்திரா, கேரளாவின் கடலோரப் பகுதிகளையும் இந்தக் கப்பல்உளவு பார்க்க வாய்ப்பிருக்கிறது.*
*தென்னிந்தியாவிலுள்ள ஆறு துறைமுகங்களை இந்தக் கப்பல் உளவு பார்க்கலாம் எனக் கூறப்படுகிறது.*

*சீனக் கப்பலின் உண்மையான நோக்கம் தொடர்பான தகவல்களை மத்திய பாதுகாப்புத்துறை சேகரித்து வருவ தாகத் தெரிகிறது.*



*மேலும், இந்தக் கப்பல் ஏற்படுத்தப் போகும் தாக்கங்கள் குறித்தும் மத்திய அரசு வட்டாரத்தில் பல விவாதங்கள் நடந்தன எனக் கூறப்படுகிறது. அத்தோடு, தென் மாநிலங்களைக் கவனமாக இருக்க வேண்டுமென மத் திய அரசு அறிவுறுத்தியிருப்பதாக செய்திகள் வெளியாகி யிருக்கின்றன.*

*இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த முடிவு, அந்த நாட்டுக்குப் பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தும் எனச் சொல்லப்படுகிறது. இது தொடர்பாக*

*இலங்கையின் மூத்த பத்திரிகையாளர்கள் சிலர், ஹஹசீனக் கப்பலின் வருகையைத் தடுத்து நிறுத்த இந்தியா எடுத்த முயற்சிகள் வீண் போய்விட்டன. இலங்கை,*


*பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளக் கடன் வழங்கியதோடு, பல்வேறு உதவிகளையும் செய்தது இந்தியா மட்டுமே. இருந்தும், இந்தியாவைப் பகைத்துக்கொள்ளும் வகையில் இப்படியான காரியத்தைச் செய்திருக்கிறார்.*

*ரணில். அதிபர் தேர்தலில் இந்தியா தன் பக்கம் நிற்கவில்லை என்பதால்தான், ரணில் சீனக் கப்பலுக்கு அனுமதி வழங்கியிருக்க வேண்டும்.*

*சீனா அழுத்தம் கொடுத்தால், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்கு நிதியுதவிகள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. ஆனால், இந்தியாவிடமிருந்து இனி உதவிகள் கிடைப்பது சந்தேகமே. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்படத் தொடங்கியிருக்கிறது. இந்த விவகாரத்தில், ரணில் மிகப்பெரிய தவறு செய்துவிட்டார். இனித்தான் அவருக்கு நிறைய சவால்கள் காத்திருக்கின்றன““ என்கின்றனர்.*

*சீனக் கப்பல் விவகாரத்தில், மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
சுறு சுறுப்புடன் செயல்பட்டு நினைத்ததில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். பணியாளர்களின் உதவியால் லாபம் காண்பீர்கள். உத்தியோகத்தில் ஏற்பட்ட சங்கடங்கள் விலகும்.

**இடபம்**
குடும்பத்தினர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். குழந்தைகளால் நன்மை உண்டாகும். மூத்தோர்கள் வழியே நல்ல செய்தி வரும். குழப்பங்கள் விலகும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மிதுனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறி உற்சாகமுடன் செயல்படுவீர்கள். பிரபலங்களின் ஆதரவுடன் செயல்பட்டு முயற்சியில் லாபம் காண்பீர்கள். பழைய பிரச்னை ஒன்றுக்கு முடிவு கட்டுவீர்கள்.

**கடகம்**
விழிப்புடன் செயல்பட்டு விரும்பியதை அடைவீர்கள். உற்சாகமான நாள். தொழில் செய்யும் இடத்தில் சில புதிய மாற்றங்களை செய்வீர்கள். லாப சிந்தனை மேலோங்கும். அதற்குரிய முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்**
திட்டமிட்டு செயல்பட்டு லாபம் அடைவீர்கள். உங்கள் நீண்ட நாள் முயற்சி ஒன்று நிறைவேறும். எதிர்பாராத வருமானம் உண்டு. வியாபாரத்தில் உங்களின் அணுகுமுறை லாபத்தை ஏற்படுத்தும்.

**கன்னி**
மனதில் தேவையற்ற குழப்பங்கள் உண்டாகும். உங்கள் மனம் மகிழும்படியான சம்பவம் ஒன்று நடைபெறும். பணியிடத்தில் உங்கள் திறமையை வெளிப்படுத்துவீர்கள். நிதி நிலை உயரும்.

**துலாம்**
குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். தம்பதி இடையே ஒற்றுமை கூடும். நீண்ட நாள் பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவதற்காக செலவுகள் செய்வீர்கள்.

**விருட்சிகம்**
வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் உண்டாகும். நிதி நிலை உயரும். குடும்பத்திற்காக சில முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பணவரவு உண்டு. பகைவர்களால் ஏற்பட்ட சங்கடம் விலகும்.

**தனுசு**
வழிபாட்டில் மனம் செல்லும். வியாபாரத்தில் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தை விரிவு செய்ய புதிய முதலீடுகளை செய்வீர்கள். பெரியோர்களின் ஆசியுடன் ஒரு செயலில் ஈடுபட்டு, ஆதாயம் காண்பீர்கள்.

**மகரம்**
பண வரவு மகிழ்ச்சி தரும். நேற்றுவரை இழுபறியாக இருந்த ஒரு பிரச்சினை இன்று முடிவிற்கு வரும். எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் உண்டாகும். போட்டியாளர்கள் விலகிச் செல்வர்.

**கும்பம்**
எதிரிகள் பலமடைவார்கள். அமைதி காக்க வேண்டிய நாள். அடுத்தவர் பிரச்னைகளில் தலையிட வேண்டாம். புதிய முயற்சி இழுபறியாகும். அலைச்சல் அதிகரிக்கும். மனம் குழப்பமடையும்.

**மீனம்**
நண்பர்களின் துணையுடன் ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். லாபமான நாள். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. செலவுகளால் மகிழ்ச்சி காண்பீர்கள். உங்கள் எண்ணம் ஒன்று பூர்த்தியாகும்.

# மேடைகளில் மட்டும் தமிழை பாராட்டினால் மட்டும் போதுமா?

## பிரதமர் மோடியிடம் கமல் கட்சி கேள்வி

சென்னை, ஒக. 03

"மேடைகளில் மட்டும் தமிழ் மொழியை பாராட்டிப் பேசினால் போதுமா", என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சி கேள்வி எழுப்பி உள்ளது.

இது குறித்து அந்தக் கட்சி விடுத்த அறிக்கையில், "இந்தியப் பிரதமர் விழா மேடைகளில் தமிழ் மொழியையும், திருக்குறளையும் பாராட்டிப் பேசுகிறார். ஆனால், நடைமுறையில் மத்திய அரசு தமிழ் மொழியைப் புறக்கணிக்கவே செய்கிறது என்று தொடர்ந்து எழும் குற்றச்சாட்டுகள் வேதனை அளிக்கின்றன.

மத்திய கலாசாரத் துறையின் கீழ் செயல்படும், இந்தியக் கலாசார உறவுக்கான பேரவை (ஐசிசிஆர்) அமைப்பில் 1970 முதல் வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களில் இந்தியப் பேராசிரியர்களுக்கான வருகை தரு இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் சமஸ்கிருதம், ஹிந்தி, தமிழ், வரலாறு, பொருளாதாரம், தத்துவம், பெங்காலி நாட்டுப்புற நடனம், உருது, புத்த மதம், இந்தியக் கல்வி உள்பட 11 வகை பாடப் பிரிவுகளுக்கான இருக்கைகள் உள்ளன.

2014இற்குப் பிறகு இருக்கைகள் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து, தற்போது 51 இருக்கைகள் மட்டுமே உள்ளன. இதில் ஹிந்திக்கு 14 இருக்கைகளும், சமஸ்கிருதத்திற்கு 5 இருக்கைகளும், இந்தியக் கல்விக்கு 26 இருக்கைகளும், பிற இருக்கைகளுக்கு 6 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஐசிசிஆர் இணையதளத்தில் உள்ள இப்பட்டியலில் செம்மொழியான தமிழ் இடம்பெறவே இல்லை என்பதுதான் அதிர்ச்சி தரும் செய்தி.

மேற்குறிப்பிட்ட பட்டியலில் தமிழ் இடம் பெறவில்லை என்ற நிலையில் அண்மையில் ஐசிசிஆர் சார்பில் வெளியிட்ட வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களில் பணியாற்ற விரும்பும் பேராசிரியர்களை விண்ணப்பிக்கக்கோரும் விளம்பரத்தில் தமிழ்மொழி இடம் பெற்றிருந்தது அதிலும், உலகின் தொன்மையான தமிழ் மொழிக்கு 2 இருக்கைகள் மட்டுமே இருப்பதும், போலந்து நாட்டிலுள்ள இந்த இருக்கைகளுக்கு 2014முதல் பேராசிரியர்கள் நியமிக்கப்படாதது மத்திய அரசின் ஓரவஞ்சனையையே காட்டுகிறது. எனவே, ஐசிசிஆர் பட்டியலில் தமிழைச் சேர்ப்பதுடன், மேலும் பல நாடுகளில் தமிழுக்கான இருக்கைகளை உருவாக்கவும் வேண்டும் என்று மக்கள் நீதி மய்யம் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கிறது.

பொதுவாகவே, மத்திய அரசின் திட்டங்கள், அறிவிப்பு வெளிவரும்போது அதில் தமிழும், தமிழக மக்களும் புறக்கணிப்பதாக எழும் விமர்சனங்களில் உண்மை இல்லாமல் இல்லை.

தமிழகத்துக்கு வரும்போது மட்டும் மேடைகளில் தமிழ் மொழியையும், திருக்குறள், சங்க இலக்கியப் பாடல்களையும் மேற்கோள் காட்டிப் பேசுவதும், நடைமுறையில் தமிழைப் புறக்கணிப்பதும் மத்திய அரசுக்கும், பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கும் வாடிக்கையாகி விட்டது.

இப்போது தமிழ் மொழிக்கு வேண்டியது புகழ் மாலையல்ல. வளர்ச்சிப்பாதை. ஆனால் மத்திய அரசு தமிழ் மொழியின் வளர்ச்சியை முடக்கும் காரியத்தை செய்வது வேதனையளிக்கிறது

ஹிந்தி, சமஸ்கிருதம் உள்ளிட்ட மொழிகளுக்கு மத்திய அரசு ஒதுக்கப்படும் நிதியுடன் ஒப்பிடுகையில், மேன்மையான தமிழ் மொழிக்கு மிகக் குறைந்த அளவு நிதியே ஒதுக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டுகளுக்கு இனியாவது முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# காஞ்சிபுரத்தில் சென்னையின் இரண்டாவது விமான நிலையம்!

சென்னை, ஒக. 03

காஞ்சிபுரம் அருகே பரந்தூரில் சென்னையின் 2ஆவது விமான நிலையம் அமைய உள்ளது. சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் அனுமதி அளித்ததும் அதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கும் என்று மத்திய இணை அமைச்சர் வி. கே. சிங் தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள மிகப்பெரிய விமான நிலையங்களில் சென்னை விமான நிலையம் முக்கியமானதாகும். இங்கிருந்து உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு செல்லும் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதையடுத்து, விமான நிலையத்தில் விரிவாக்கப் பணிகள் நடந்து வருகின்றன.

அடுத்த சில ஆண்டுகளில் விமானங்கள் மற்றும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதால் இடநெருக்கடியை சமாளிக்க, சென்னைக்கு அருகில் புதிய விமான நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

இதன்படி, காஞ்சிபுரம் பரந்தூரில் விமான நிலையம் அமைக்க 4,971 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. சுமார் ரூ.60 ஆயிரம் கோடி இந்திய ரூபாயில் விமான நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து 73 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பரந்தூர் அமைந்துள்ளது.

# சிறந்த தொழில் முதலீட்டு இடமாக தமிழகம் மாற்றம் பெறவேண்டும்!

## முதல்வர் ஸ்டாலின்



சென்னை, ஒக. 03

தென்காசியாவிலேயே தொழில் முதலீடுகள் செய்ய உகந்த பகுதியாக தமிழகம் விளங்க வேண்டும் என்பதே என் ஆசை என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

நேற்று நிகழ்வு ஒன்றில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறிநர்.

தமிழகத்தின் அனைத்துத் துறைகளும் முன்னேற்றம் பெறுகின்றன. நம்முடைய இலக்கை நோக்கி சிறு முன்னேற்றம் கண்டு வருகிறோம். தொழில்புரிய ஏதுவான மாநிலங் களின் பட்டியலில் 3 வது இடத்துக்கு தமிழகம் முன்னேறியுள்ளது.

இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் புத்தொழில் காப்பகங்கள் உள்ளன. அண்ணா பல்கலைக்கழகத்தில் புத்தொழில் முயற்சி நிறுவனம் 25 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் அமைய உள்ளது. இளம் தொழில் முனைவோ ரின் பொருட்களை சந்தைப்படுத்த "ஸ்டார்ட் அப்" தமிழ்நாடு சார்பில் முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் உள்ள தமிழ் தொழில் அதிபர்களை ஒருங்கிணைத்து முதலீடுகளுக்கான தமிழ் ஏஞ்சல்ஸ் என்ற நிறுவனம் அமைக்கப்படும்.

தென்காசியாவிலேயே தொழில் முதலீடுகள் செய்ய உகந்த பகுதியாக தமிழகம் விளங்க வேண்டும் என்பதே என் ஆசை. தமிழகத்தின் வளர்ச்சிக்கு படிக்கட்டாக பரந்தூர் புதிய விமான நிலையம் அமையும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# பாராளுமன்ற கூட்டத்தொடர் ரணில் தலைமையில் இன்று

கொழும்பு, ஓக. 03
9 ஆவது நாடாளுமன்றத்தின் 3 ஆவது கூட்டத்தொடர் இன்று முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கவால் பாராளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பித்து வைக்கப்படும்.
அன்றைய தினம் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மாத்திரமே இடம் பெறும். தனது கொள்கை விளக்க உரையின் சர்வக்கட்சி அரசுக்கான அழைப்பை ஜனாதிபதி வெளியிடுவார். பொருளாதார மேம்பாட்டு திட்டங்களும் உள்ளடக்கப்படும். (அ)

# கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எந்தவித சலுகையும் இல்லை

## சிங்கப்பூர் அரசு அறிவிப்பு

கொழும்பு, ஓக. 03
முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எந்தவித சலுகைகளையும் வழங்கவில்லை என சிங்கப்பூர் அரசாங்கம் அறிவித்துள்ளது.
இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சிங்கப்பூர் அரசாங்கம் எந்த சலுகையும், விருந்தோம் பலும் அளிக்கவில்லை என சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் விவியன் பால கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
கோட்டாபயவின் சிங்கப்பூர் வருகை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ஜெரால்ட் கியாமின் எழுப்பிய கேள்விக்கு எழுத்து மூலமாக வழங்கிய பதிலிலேயே பாலகிருஷ்ணன் இதனைத் தெரிவித் துள்ளார்.
பொதுவாக சிங்கப்பூர் அரசாங்கம் முன் னாள் அரச தலைவர்கள் அல்லது தலைவர்களுக்கு சலுகைகள் மற்றும் விருந்தோம பல் ஆகியவற்றை வழங்கு வதில்லை.
இதனடிப்படையில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கும் எந்த சலுகையும், விருந்தோம்பலும் அளிக்கவில்லை என்று பால கிருஷ்ணன் குறிப்பிட்டார்.
கோட்டாபய தனிப்பட்ட பயணமாக ஜூலை14 அன்று சிங்கப்பூரை வந்தடைந் தார் என்று சிங்கப்பூர் வெளியுறவு அமைச் சகம் முன்னர் கூறியது.
தனது குறுகிய கால வருகை வீஸாவை நீடித்த நிலையில் அவர் ஓகஸ்ட்-11 வரை சிங்கப்பூரில் தங்குவதற்கு அனுமதிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

*சீன உளவு கப்பல்*

# சுயநல அரசியலில் ஒரு சில சக்திகள்!

## ஜனாதிபதி ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 03

**“இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு சீனக் கப்பல் வரும் விடயத்தை உள்ளகச் சக்திகளும், வெளியகச் சக்திகளும் சுயநல அரசியலுக்கும், தத்தமது பலங்களை நிரூபிப்பதற்கும் பயன்படுத்த முயல்கின்றார்கள்.”**

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
கொழும்பில் வெளிநாட்டுச் செய்தி யாளர் ஒருவருக்கு வழங் கிய நேர்காண லிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: -
ஒரு நாட்டின் வெளிவிவகாரம் சம்பந் தமாக அந்த நாட்டு அரசே தீர்மானம் எடுக்கும். அதில் வெளிச்சக்திகள் தலையிட முடியாது. நாட்டின் பாதுகாப்பு சம்பந் தமாக தீர்மானம் எடுக்கும்போது அரசும், பாதுகாப்புத் தரப்பினரும் இணைந்து முடி வெடுப்பார்கள். அதன் பிரகாரம், சீனக் கப்பல் வருவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியிருக்கின்றது.



இந்த விடயத்தை உள்ளக சக்திகளும், வெளியகச் சக்திகளும் சுயநல அரசியலுக்கும், தத்தமது பலங்களை நிரூபிப்பதற்கும் பயன்படுத்த முயல்கின்றார்கள். எந்த நாட் டையும் பகைக்கவேண்டிய, மோதவேண்டிய நிலைமை இலங்கைக்குக் கிடையாது. வரலாறு காணாத பொருளாதார அடியால் வீழ்ந்து கிடக்கின்றது இலங்கை. அதிலிருந்து மெல்ல மெல்ல இலங்கை இப் போது தான் எழுகின்றது.
இந்தநிலையில், வெளிநாடுகளின் ஒத்து ழைப்பையே கோரி நிற்கின்றோம். பகைமைகளை மறந்து ஒவ்வொரு நாடுகளும் இலங்கைக்கு உதவ வேண்டும் என்பதுதான் எங்களின் கோரிக்கையாக இருக்கின்றது. சீனக் கப்பல் விவகாரம் தொடர்பில் உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வெளியாகும் முரண்பாடான செய்திகள் எமக்கு மிகவும் மன வருத்தத் தைத் தருகின்றது-என்றார். (அ)

# மீன்தொட்டி எடுக்க சென்றவர் மண் சரிவில் சிக்கி உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 03
நோட்டன் பிரிட்ஜ் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட டெப்லோ பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்ட இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் பலியானதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடை மழை பெய்து வருகின்ற நிலையில், நேற்றுமுன்தினம் மாலை ஏற்பட்ட மண் சரிவிலே இரண்டு பிள்ளைகளின் தந்தையான 37 வயதுடைய சஞ்ஜீவ விலமவீர என்பவர் இவ்வாறு மண் சரிவில் சிக் குண்டு பலியாகியுள்ளார்.
அதிக மழை காரணமாக குறித்த பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் அப்பகுதியிலிருந்து நேற்று முன்தினம் பிற்பகல் வெளியேற்றப்பட்டனர்.
இந் நிலையில் வீட்டில் இருந்த மீன் தாங்கியை எடுக்கச் சென்றவரே இவ்வாறு மண்சரிவில் சிக்குண்டு காணாமல் போயுள்ளார்.
பின்னர் நோட்டன் பிரிட்ஜ் பொலிஸாரும் பிரதேச வாசிகளும் மண்சரிவில் சிக்குண்ட சடலத்தை நேற்று முன் தினம் இரவு மீட்டு பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# நட்சத்திர ஹோட்டலில் இருந்தே போராட்டக்காரர்களுக்கு உணவு

## பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 03
கொழும்பில் உள்ள நட்சத்திர ஹோட் டல் ஒன்று, காலி முகத்திடல் போராட்டக்காரர்களுக்கு ஆரம்பம் முதலே உணவு வழங்கியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
ஹோட்டலில் இருந்து நாளொன்றுக்கு 500 முதல் 600 வரையான உணவுப் பொட்டலங்களை போராட்டக்காரர்கள் பெற்றுள்ளதாக தங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
போராட்டம் ஆரம்பித்த தில் இருந்து அண்மைக்காலம் வரை உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.
இந்த உணவுப் பொட்டலங்கள் இலவசமாக வழங்கப்பட்டதா அல்லது ஏதேனும் அமைப்பினால் முன்பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டதா என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட போராட்டக்காரர் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இது தெரியவந்துள்ளதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# விசாரணை நடவடிக்கைகள் மூலம் எமது குரலை அடக்கிவிட முடியாது

## கைதாவதற்கு முன்னர் கூறினார் ரெட்டா

கொழும்பு, ஓக. 03
“விசாரணை என்ற பெயரில் எங்களை அழைத்து அச்சுறுத்துவதன் மூலமோ அல்லது எங்களைக் கைதுசெய்து சித்திரவதை செய்துவிட்டு விடுவிப்பதன் மூலமோ அல்லது எங்களைக் கைதுசெய்து சிறையில் தொடர்ந்து அடைத்து வைப்பதன் மூலமோ அரசுக்கு எதிரான எங்களின் குரலை அடக்க முடியாது.”
- இவ்வாறு காலிமுகத்திடல் போராட்டக் குழுவைச் சேர்ந்த சமூக ஊடகச் செயற்பாட்டாளர் ‘ரெட்டா’ என்ற ழைக்கப் படும் ரதிந்து சேனாரத்ன தெரிவித்தார்.
விசாரணை ஒன்றுக்காக கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு நேற்று முன்தினம் காலை அழைக்கப்பட்டிருந்த ‘ரெட்டா’, நேற்றுமுன்தினம், மாலை கைது செய்யப்பட்டார். விசாரணைக்குச் செல்வ தற்கு முன்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
நேற்றுமுன்தினம் காலை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு சென்றிருந்த இவரி டம் நீண்ட நேரம் விசாரணை நடத்தப் பட்டது. அதன் பின்னரே இவர் கைது செய்யப்பட்டார்.
ஏற்கனவே கடந்த மே மாதத்தில் கொழும்பு - கோட்டை நீதிமன்றத்துக்கு முன்னால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டிருந்த இவர் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது. (அ)

# ரணிலின் வீட்டுக்குத் தீ வைத்த மூவர் சிக்கினர்

கொழும்பு, ஓக. 03
கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் உள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்துக்குத் தீ வைத்த சம்பவத்தில் பிரதான சந்தேகநபர் உட்பட மூவர் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.
குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தினர் நேற்றுமுன்தினம் இரவு பிலியந்தலை மற்றும் நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் வைத்து இவர்களைக் கைது செய்தனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.
மடபாத்த மற்றும் கொழும்பு - 05 பிர தேசங்களைச் சேர்ந்த 18 - 22 வயதுக்கு இடைப்பட்டவர்களே இவ் வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த ஜூலை 9ஆம் திகதி நடைபெற்ற போராட்டத்தின் போது இந்தத் தீ வைப்பு இடம் பெற்றுள்ளது. இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் வீடு பாரிய ளவில் சேதமடைந்துள்ளதுடன், அவரது தனிப்பட்ட நூலகமும் எரிந்து நாசமாகியுள்ளது என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# ஆடைத் தொழிலுக்கு சலுகை!

கொழும்பு, ஓக. 03

ஆடைத் தொழிலுக்குத் தேவையான உபகரணங்கள், பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வரிச் சலுகைகளை வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படாத பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வரிச் சலுகையை வழங்கும் வகையில் அமைச்சர் அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்துள்ளார். மசகு எண்ணெய் விலையேற்றம் மற்றும் நாட்டில் நிலவும் பாதகமான பொருளாதாரச் சூழல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள ஆடைத் தொழில் துறைக்கு நிவாரணம் வழங்கும் வகையில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (அ)

# அரிசி இறக்குமதி தற்காலிக நிறுத்தம்

கொழும்பு, ஓக. 03

தேவையான அளவு அரிசி நாட்டில் உள்ளமையினால் அரிசி இறக்குமதியை தற்காலிகமாக நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாய விதை இறக்குமதியாளர்கள் சங்கத்தினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்பார்த்தமையை விடவும் அதிக நெல் அறுவடை கிடைக்கின்றது. இந்த போகம் நிறைவடையும்போது வெளிநாட்டில் இருந்து அரிசி இறக்குமதி செய்வதை நிறுத்துமாறு ஆலோசனை வழங்க முடியும்.

எதிர்காலத்தில் ஏற்படும் தேவைக்கு அமைய மாத்திரம் அரிசியை இறக்குமதி செய்ய முடியும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (அ)

# சகல அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல் ஆணைக்குழு அழைப்பு

கொழும்பு, ஓக. 03

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல் ஆணைக்குழு முக்கிய கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவாவினால் இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் சட்ட திருத்தத்துக்காக நியமிக்கப்பட்ட குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையின் முன்மொழிவுகள் குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளது. (அ)

# ஊழல் குற்றச்சாட்டில் இருந்து சிறிபால டி சில்வா விடுவிப்பு?

கொழும்பு, ஓக. 03

முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு எதிரான கையூட்டல் வழக்கு ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழு அவர் மீதான ஊழல் குற்றச்சாட்டை நீக்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு எதிரான கையூட்டல் வழக்கு தொடர்பான விசாரணை அறிக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா விடுத்த கோரிக்கைக்கு அமைய, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மூவரடங்கிய விசாரணைக் குழுவை கடந்த 22ஆம் திகதி நியமித்திருந்தார்.

அமைச்சரவை அமைச்சர் ஒருவர், ஜப்பானின் தயிஸே நிறுவனத்திடம் கையூட்டல் கோரியதாக, சமூக வலைத் தளங்கள் உட்பட அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தன.

இதனையடுத்து விசாரணை நிறைவுறும் வரையில், அமைச்சுப் பதவியில் இருந்து தாம் விலகுவதாகவும் நிமல் சிறிபால டி சில்வா அறிவித்தார்.

இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மீது எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சுமத்தியதுடன், அது குறித்து விசாரணை நடத்துமாறும், ஜனாதிபதியிடம் கோரியிருந்தார்.

இதற்கமைய, நியமிக்கப்பட்டுள்ள மூவரடங்கிய குழுவிடம், கடந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்திருந்தார்.

அதன்படி, நேற்று முன்தினம் அந்த விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# தமிழ் முற்போக்குக் கூட்டணி பாதாள உலக குழு கிடையாது!

## மனம் திறந்தார் மனோ கணேசன்

கொழும்பு, ஓக. 03

**“எமது கூட்டணி என்பது இரகசியத் திட்டங்கள் தீட்டும், ஒரு பாதாள குழு வல்ல. ஆயுத போராட்ட இயக்கமும் அல்ல. இராணுவ இரகசியங்கள் இங்கே கிடையாது. ஆகவே பொது நிகழ்வில் மக்களுடன், எனது எண்ணத்தை பகிந்து கொள்வதில் எனக்கு எந்தவித தயக்கமும் இல்லை. இது ஒரு ஜனநாயக பரிமாணம் ஆகும். இனிமேலும் அப்படியே ஆகும். இதுவே கலந்துரையாடல்களை மேம்படுத்தும். எனினும் இதுபற்றிய முடிவை, வேறு அனைத்து விவகாரங்களையும் போன்று, எமது அரசியல் குழுவே கூடி தீர்மானிக்கும்.” -இவ்வாறு கூறியிருக்கிறார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.**

இது குறித்து அவர் தனது முகநூல் பதிவில் தெரிவித்துள்ளவை வருமாறு:

ஆயுட்கால தலைவராக விடாப்பிடியாக நிற்காமல், வழிவிட்டு, தகுதிகொண்ட பிறருக்கும், பொறுப்பை வழங்க சுயமாகவே முன்வருவது ஒரு முற்போக்கு காரியம் என நான் நினைக்கிறேன்.

இதில், என்னை புரிந்துக்கொண்டு நேரடியாகவும், தொலை தொடர்பு மற்றும் இணைய வழிமுறைகள் மூலமும் என்னுடன் கலந்துரையாடிய அனைத்து நண்பர்களுக்கும் நன்றி.

2015ஆம் வருடம் தமிழ் முற்போக்கு கூட்டணி, ஆரம்பிக்கப்பட்டு ஏழு வருடங்களாக நான் தலைமை பதவியில் இருக்கிறேன். கடைசி வரை அதில் நானே இருக்க வேண்டும் என்ற “பாரம்பரிய அரசியல்” வழமையில் இருந்து விடுபட்டு, தகுதி வாய்ந்த இன்னொருவருக்கு, இப்பதவியை பொறுப்பேற்க இடம் விட விரும்புகிறேன்.

அதற்காக, நாம் உருவாக்கிய கூட்டணியிலிருந்தோ, அரசியலை விட்டோ போக வில்லை. எனக்குள் எக்கச்சக்கமாக நெருப்பும், இரும்பும் கொட்டிக் கிடக்கின்றன. கடமைகளும் காத்திருக்கின்றன.

ஆகவேதான் கூட்டணியில் அரசியல் துறை சார்ந்த பிறிதொரு பொறுப்பை ஏற்றுக்கொண்டு, மலையக தமிழ் இலங்கையர் தொடர்பில், நாம் உருவாக்கி, இப்போது நாட்டின் நெருக்கடி நிலைமை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ள, அரசியல் அபிலாஷை கோரிக்கைகளை முன்னெடுக்கும் நோக்கில் முனைப்பாக செயற்பட விரும்புகிறேன்.

எனது இந்த மனக்கிடக்கையை, சமீபத்தில் நான் கலந்துகொண்ட ஒரு ஊடக நிகழ்வில் மனந்திறந்து மிகவும் இயல்பாக சொன்னேன். உண்மையில் செவ்வி கண்ட ஊடகரின் கேள்விக்கு பதிலாகவே என் பாணியில் இதைச் சொன்னேன்.

எமது கூட்டணி என்பது இரகசியத் திட்டங்கள் தீட்டும், ஒரு பாதாள குழுவல்ல. ஆயுத போராட்ட இயக்கமும் அல்ல. இராணுவ இரகசியங்கள் இங்கே கிடையாது. ஆகவே பொது நிகழ்வில் மக்களுடன், எனது எண்ணத்தை பகிந்து கொள்வதில் எனக்கு எந்தவித தயக்கமும் இல்லை.

இது ஒரு ஜனநாயக பரிமாணம் ஆகும். இனிமேலும் அப்படியே ஆகும். இதுவே கலந்துரையாடல்களை மேம்படுத்தும். எனினும் இதுபற்றிய முடிவை, வேறு அனைத்து விவகாரங்களையும் போன்று, எமது அரசியல் குழுவே கூடி தீர்மானிக்கும்.

அதேவேளை ஒரு சிலரால், நல்லெண்ணத்துடனும், அரசியல் விழிப்புணர்வுடனும், இதை ஏன், பார்க்க முடியவில்லை என எனக்கு தெரியவில்லை. பார்வை அற்றவர், யானையை பார்த்து கருத்து கூறுவதை போன்று ஒரு சிலர் கருத்து கூறுகிறார்கள்.

சமகாலத்தில், இலங்கையில் தேசிய மட்டத்திலும் சரி, பிராந்திய மட்டத்திலும் சரி, எந்தவொரு அரசியல் கூட்டணியும் எம் அளவில் வெற்றிநடை போடவில்லை. பல கூச்சலும், குழப்பமுமாகவே கிடக்கின்றன. இந்த உண்மை சிலர் கண்களுக்கு தெரிவதில்லை. விஷயம் புரியாமல் பேசும், அரசியல் குருடர்கள் தங்களை அரசியல் ரீதியாக இன்னமும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

2015 ஜூன் மாதம் எமது கூட்டணியை ஆரம்பித்தபோது, இது “தேர்தல்கள் முடியும் வரைதான்”, “சில மாதங்கள் வரைதான்”, என பலர் தம் ஆசைகளை ஆரூடமாக கூறினார்கள்.



இன்று இவர்களையெல்லாம் ஏமாற்றிவிட்டு, கடந்த ஏழு வருடங்களாக கூட்டணி செயற்படுகிறது. இன்னமும் தொடர்ந்து வீறு நடைபோடும். இப்போது, தமிழ் முற்போக்கு கூட்டணி, ஒரு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாகவும் தகைமை பெற்றுள்ளது.

2019 வரையிலான நான்கு வருட, ஆட்சிக் காலத்தில் அதற்கு முன் செய்யப்படாத பல காரியங்களை செய்து முடித்தோம். இன்னமும் பல காரியங்களுக்கு அடித்தளம் இட்டுள்ளோம். கூட்டணியோடு இணைந்து செயற்படும் சமூக செயற்பாட்டாளர்கள், அறிவுஜீவிகள் ஆகியோர் அடங்கிய ஆலோசகர் குழுவின் துணையுடன் இலங்கை தேசிய தளத்தில் முழுமையான பிரஜைகளாக விரும்பும் மலையக தமிழ் இலங்கை மக்களது அபிலாஷைகள் என்ற ஆவணத்தை தயாரித்து, அதில் பல அரசியல் கோரிக்கைகளை தொகுத்துள்ளோம்.

இவை நாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களை, அடுத்த வளர்ச்சி கட்டத்துக்கு அழைத்துச் செல்லும் என எண்ணுகிறோம். கடந்த காலங்களைவிட இன்று, தேசிய அரங்குகளில் மலையக தமிழ் இலங்கையர் என்ற அடையாளம் பெரிதும் புரிந்துக்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோல், கொழும்பில் இருக்கின்ற வெளிநாட்டு தூதரகங்களில், ராஜதந்திரிகள் மத்தியில், சர்வதேசிய அரங்குகளில், குறிப்பாக இந்திய அரசு, தமிழக அரசு தரப்புகளிலும், நாம் ஒரு வளர்ந்து வரும் தரப்பாக புரிந்துக்கொள்ளப்படுகிறோம். மலையகம் என்றால், அது “மலையும் மலை சார்ந்த இடம்” மட்டுமே என்ற தமிழ் இலக்கண வரையறைக்கு அப்பாலான அரசியல் வரலாற்று அடையாளம் புரிந்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

மிகவும் பின்தங்கிய தோட்ட தொழிலாளர்களை கைதூக்கி விடும் அதேவேளை ஒட்டுமொத்த மலையக தமிழரும் தோட்ட தொழிலாளரல்ல என்ற, நமது பன்முக வளர்ச்சியை உலகம் புரிந்துக்கொண்டு வருகிறது.

அதேவேளை வடக்கு கிழக்கில் வாழும் ஈழத்தமிழ் உடன்பிறப்புகளுடனும் நல்லுறவை முன்னைவிட அதிகம் பேணுகிறோம். இதை நாம் எமது ஒரு முன்னணி கொள்கையாக கொண்டு நடத்துகிறோம். ஈழத்தமிழரும், மலையக தமிழரும் உள்வாங்கப்பட்டே இலங்கை தமிழ் அடையாளம் வரையறுக்கப்படுகிறது.

இந்த பணிகளில் எல்லாம் எனது பங்களிப்பு என்னவென்று எனக்கு தெரியும். மக்களுக்கு தெரியும். நாம் செல்ல வேண்டிய பயண தூரம் அதிகம். எனினும் திட்டமிட்டு முன்நகருகின்றோம். இந்த பயணத்தில் இன்னமும் புதியவர்களை உள்வாங்கப்பட வேண்டும். வாய்ப்புகளை வழங்கப்பட வேண்டும். இந்த முற்போக்கான பின்னணியில் எனது கருத்து புரிந்துக்கொள்ளப்பட வேண்டும்-என்றார். (அ)

# எனது உயிரை பணயம் வைத்தே ஜனாதிபதித் தேர்தலில் போட்டி!

## டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 03

**“பிரபுத்துவ அரசியலை எதிர்த்து நிற்பது பெரும் சவால். எனது உயிரை பணயம் வைத்தே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டேன்.” - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.**

தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பான அரசியல் நிகழ்வில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

2005 ஜனாதிபதி தேர்தலின் போது, ரணில் விக்கிரமசிங்கவை தனிப்பட்ட ரீதியில் அவமானப்படுத்தும் விதத்தில் ‘போஸ்டர்கள்’ வடிவமைக்கப்பட்டிருந்தன.

முதலாவது போஸ்டர் ‘மைக்கல் ஜக்சன்’ போல் ஆடை அணிவிக்கப்பட்டது, 2 ஆவது போஸ்டரில் பராக்கிரமபாகு மன்னரின் படத்துக்கு, ரணிலின் தலை பொருத்தப்பட்டது.

தேர்தல் பிரச்சார நடவடிக்கையை நான் பொறுப்பேற்ற போது, இந்த போஸ்டர்களை நிராகரித்தேன். ரணில் விக்கிரமசிங்கவை தனிப்பட்ட ரீதியில் அவமதிக்கும் வகையிலான 40 ஆயிரம் போஸ்ட்டர்களை எரிக்க நடவடிக்கை எடுத்தேன். இது மகிந்தராஜபக்ஷவுக்கும் தெரியும்.

1994 முதல் 2019 வரை ரணில் விக்கிரமசிங்கதான் எமது



அணியின் அரசியல் எதிரி. ஆனால் பாரா ளுமன்றத்தில் ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பின் போது அவரை ஆதரிப்பதற்கு கட்சி (மொட்டு கட்சி) முடிவெடுத்தது. அது தொடர் பில் அதிகாரப்பூர்வமாக அறிக் கையும் வெளியிடப்பட்டிருந்தது.

எனது அரசியல் வாழ்வில் ரணில் விக்கிரமசிங்கவை நான் தனிப்பட்ட ரீதியில் தாக்கி பேசியது கிடையாது. மத்திய வங்கி கொள்ளை, பட்டலந்த விவகாரம் பற்றி விமர்சித்ததும் கிடையாது. இது ரணிலுக்கும் தெரியும்.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதித் தேர்வில் வெற்றிபெறுவதற்கு நாணய நிதியம் கூட விஞ்சும் விதத்தில் நகர்வுகள் (பண பறிமாற்றம்) முன்னெடுக்கப்பட்டன. அவை என்றாவது வெளிச்சத்துக்கு வரும்.

டலஸ் அழகப்பெருமவுக்கு எதிராக ஜயவர்தன மற்றும் ராஜபக்ஷ குடும்பம் ஒன்றிணைந்தது.

நாட்டில் பிரபுத்துவம் அற்ற அரசியலுக்காக முன்நின்றவர்கள்தான் விஜேகுமாரதுங்க, ரோஹண விஜேவீர, ரணசிங்க பிரேமதாஸ, வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆகியோர். இறுதியில் என்ன நடந்தது? நால்வரும் கொலை செய்யப்பட்டனர்.

இவர்களின் அரசியல் நிலைப்பாடுகளை நான் நியாயப்படுத்த முற்படவில்லை. (இந்த பகுதியை மட்டும் பிரசாரம் செய்து, தவறான கருத்தை முன்னெடுத்துவிடவேண்டாம்)

பிரபுத்துவ அரசியலை எதிர்ப்பது எவ்வளவு பெரிய சவால் என்பதை புரிந்துகொண்டேன். எனது உயிரை பணயம் வைத்துதான் சவாலை ஏற்றேன். எனது தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுகின்றது-என்றார். (அ)

# வறிய மாணவர்களுக்கு இலவச பயிற்சி புத்தகம்

கொழும்பு, ஓக. 03

வறிய மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சிப் புத்தகங்களை வழங்குவது குறித்து கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. அதற்கான பணத்தை ஒதுக்குவதற்கு மத்திய வங்கி நடவடிக்கை எடுத்து வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

இதேவேளை, பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்காக இந்தியாவில் இருந்து மை மற்றும் காகிதத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆரம்ப தரங்களுக்கு மதிய உணவு வழங்குவது குறித்தும் கல்வி அமைச்சு கவனம் செலுத்தி வருவதாகவும் அமைச்சர் கூறினார். (அ)

# ஓமிக்ரோன் பி.ஏ. 5 கொழும்பில் பரவல்

கொழும்பு, ஓக. 03

உலகில் மிக வேகமாக பரவும் ஓமிக்ரோன் பி.ஏ. 5 வகை கொழும்பில் பரவ ஆரம்பித்துள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொற்று நோயியல் பிரிவின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

புதிய வகை மாறுபாடு முதன்முறையாக இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த பிறழ்வு காரணமாக அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படலாம். கடந்த சில காலமாக உலகம் முழுவதும் கொரோனா அலையை உருவாக்குவதில் இந்த திரிபு வெற்றியடைந்துள்ளதாகவும் பேராசிரியர் சந்திம ஜீவந்தர சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட அண்மைய மரபணு பகுப்பாய்வின்படி, இந்த ஓமிக்ரோன் துணை வகை இலங்கையில் பரவி வருவதாக கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முந்தைய நோய் அல்லது தடுப்பூசிகள் மூலம் உடலில் கட்டமைக்கப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் திறன் இந்தப் புதிய துணை வகைக்கு உள்ளது என கண்டறியப்பட்டுள்ளதால், கூடிய விரைவில் பூஸ்டர் தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ளுமாறு பொதுமக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

அத்துடன், இலங்கையில் பரவி வரும் பி.ஏ. 5 உப வகை எதிர் காலத்தில் மிகவும் ஆபத்தானதாக அமையலாம் எனவும் பேராசிரியர் சந்திம ஜீவந்தர கூறினார். (அ)

# சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்ற பல நாடுகள் அழிவடைந்துள்ளன!

## அஜித் நிவாட் கப்ரால் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 03

இலங்கையின் அனைத்து பிரச்னைகளுக்கும் சர்வதேச நாணய நிதியம் தீர்வாகாது என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் அவர் இந்த விடயத்தை உயர்நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் அனைத்து பிரச்னைகளுக்கும் சர்வதேச நாணய



நிதியம் தீர்வு வழங்கும் என கருதுவது ஓர் மாயை. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொண்ட பலநாடுகள் அழிவடைந்துள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் வரியை அதிகரித்தல், மக்களுக்கு வழங்கப்படும் நலன்புரிகள் அனைத்தையும் ரத்து செய்தல் அல்லது மட்டுப்படுத்தல் உள்ளிட்ட மக்களுக்கு பாதகம் ஏற்படுத்தக் கூடிய பல தீர்மானங்களை எடுக்க நேரிடும்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் என்ற பதவியை வகித்த போது சட்ட ரீதியாக சரியான தீர்மானங்களை மட்டுமே நான் எடுத்துள்ளேன் -என்றார். (அ)

# கைது செய்யப்படுவதை தடுக்க கோரி அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் மனு தாக்கல்

கொழும்பு, ஓக. 03

தான் கைது செய்யப்படுவதை தடுக்க உத்தரவிடுமாறு கோரி அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், பொலிஸ்மா அதிபர், இராணுவத் தளபதி, விமானப்படைத் தளபதி, கடற்படைத் தளபதி, சட்டமா அதிபர் உள்ளிட்டோர் பிரதிவாதிகளாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

எவ்வித நியாயமான அடிப்படையும் இன்றி தம்மைக் கைது செய்ய பிரதிவாதிகள் தயாராகி வருவதாகவும் குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தனது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக தீர்ப்பு வழங்குமாறும், தன்னை கைது செய்வதை தடுக்க உத்தரவிடுமாறும் அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் குறித்த மனுவில் மேலும் கோரியுள்ளார்.

# எரிபொருள் பெற்றுவிட்டு பயணிகளை ஏற்றாத தனியார் பஸ்களின் அனுமதிப்பத்திரம் இரத்து!

கொழும்பு, ஓக. 03

எரிபொருள் பெற்று பயணிகளை ஏற்றிச் செல்லாத தனியார் பஸ்களின் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த பஸ்களின் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான டிப்போக்களில் எரிபொருள் வழங்கப்படுகின்றது.

எனினும் எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் சில தனியார் பஸ்கள் பயணிகள் சேவையில் ஈடுபடுவதில்லை என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக சில தனியார் பஸ்களுக்கு அதிக விலைக்கு குறித்த எரிபொருளை விற்பனை செய்வதாகவும் இலங்கை போக்குவரத்துச் சபை அண்மையில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தது.

இந்த நிலையிலேயே எரிபொருள் பெற்று பயணிகளை ஏற்றிச் செல்லாத தனியார் பேருந்துகளின் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கொட்டும் மழை காரணமாக 7 ஆயிரத்து 649 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 03

நாட்டின் சில பகுதிகளில் நிலவும் கடும் மழை காரணமாக 5 மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்து 766 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 649 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அனர்த்த நிலைமை காரணமாக 3 மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடும் மழை காரணமாக குக்குலே கங்கை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையினால், புலத்சிங்கள மொல்காவ வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. (அ)

# நமக்கு தெரிந்த முன்னைய ரணில் வெளிக்கிளம்புவார் என்று நம்புவோம்

கலாநிதி ஜெகான் பெரேரா

**போ**ராட்ட இயக்கத்தின் முன்னணி உறுப்பினர்களை தனிப்பட்டமுறையில் இலக்குவைப்பதன் மூலம் அந்த இயக்கத்தை ஒடுக்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற முயற்சிகள் முன்னெப்போதையும் விட நாட்டை துருவமயப்படுத்திக் கொண்டிருக்கின்றன. போராட்டத்துக்கான அடிப்படைக் காரணிகளைக் கவனத்தில் எடுத்து கையாளுவதற்கு பதிலாக அரசாங்கம் போராட்ட இயக்கத்தின் முக்கியமான உறுப்பினர்களை வலுவற்ற -- ஐயுறவான குற்றச்சாட்டுக்களின் பேரில் அவசரகால சட்டத்தின் கீழ் இலக்குவைத்துக் கொண்டிருக்கிறது.

இந்த அவசரகாலச் சட்ட சூழ்நிலையில் வழமையான சட்டமும் அதன் மூலம் கிடைக்கின்ற பாதுகாப்பு உத்தரவாதங்களும் இடைநிறுத்தப்படுகின்றன.

அரசாங்கத்தின் பாராளுமன்ற இருப்புநிலை பலமானதாக தோன்றுகிறது, ஆனால் அரசாங்கத்துக்கான பொதுமக்களின் ஆதரவு மிகவும் பலவீனமானதாக இருக்கிறது என்று நாடுகளின் கடன்செலுத்தும் அந்தஸ்தை ஆராயும் "ஃபிற்ஸ் ரேட்டிங் " ஏஜென்சி 28 ஜூலை 2022 தெரிவித்தது. அதனால், அரசாங்கம் போராட்டக்காரர்களை ஒடுக்குவதை விடுத்து அவர்களின் நியாயபூர்வமான குரலுக்கு செவிசாய்த்து அவர்களுடன் பயனுறுதியுடைய முறையில் பேச்சுவார்த்தையை நடத்தவேண்டியது முக்கியமானதாகும்.

திறந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி மாஹிம் மெண்டிஸ் அண்மையில் "த ஐலண்ட்" பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றில் சுட்டிக்காட்டியதைப் போன்று, நாட்டில் வர்க்க மற்றும் சமூக அடிப்படைகளில் இடம்பெறுகின்ற துருவமயமாதல் போக்கு அரசியல் சமுதாயத்தின் உறுதிப்பாட்டுக்கு மிகவும் ஆபத்தானதாகும். கலாநிதி மெண்டிஸின் கருத்தை நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த சுமார் 30 சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சரியானது என்று நியாயப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களை வார இறுதியில் சந்தித்துப் பேசும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

கொந்தளிப்பான சூழல் நிலவுகின்ற குறிப்பிட்ட சில பகுதிகளில் அமைக்கப்பட்ட உள்ளூர் மட்ட மதங்களுக்கிடையிலான குழுக்களைச் சேர்ந்த அவர்களுடனான கலந்துரையாடலின்போது முக்கியமான விடயம் ஒன்று சுட்டிக்காட்டப்பட்டது. அதாவது பொருளாதார இடர்பாடுகள் உள்ளூர் மட்டத்தில் முரண்நிலைகளைத் தோற்றுவிக்கக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கின்றன.

ஊழலும் தவறான நிருவாகமும் தோற்கடிக்கப்டுவதை உறுதிசெய்யக்கூடிய "முறைமை மாற்றத்தை" (System Change) சாதிப்பதற்கான போராட்டம் அமைதி வழியிலானதாக பேணப்பட வேண்டியது முக்கியமானது என்ற இன்னொரு விடயமும் அங்கு வலியுறுத்தப்பட்டது.

அந்த சந்திப்பு முடிவடைந்து நான் புறப்படத் தயாரானதும் பெண்மணியொருவர் என்னிடம் வந்து தனியாக பேசமுடியுமா என்று கேட்டார். பிரச்சினையில் சிக்கிக்கொள்ள தான் விரும்பவில்லை என்று கூறிய அவர் வணபிதா ஜீவந்த பீரிஸை காப்பாற்ற எங்களால் ஏதாவது செய்யமுடியுமா என்று கேட்டார். வணபிதா பீரிஸ் இயங்குகின்ற இரத்தினபுரி மாவட்டத்தில் தொலஸ்வல பகுதியைச் சேர்ந்தவர் என்றும் அந்த பெண்மணி தன்னை அடையாளப்படுத்திக்கொண்டார். அது வறிய இந்திய வம்சாவளி தமிழர்கள் வாழ்கின்ற பகுதி. அவர்களின் வேதனங்கள் மிகவும் குறைவானவை. தற்போதைய பணவீக்கத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவர்கள் திணறுகிறார்கள்.

உணவுப்பொருட்களின் விலைகள் 100 சதவீதத்துக்கும் கூடுதலாக அதிகரித்துவிட்டன. நிலையான வருமானத்தைப் பெறுபவர்கள் குறிப்பாக தினம் ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாக சம்பாதிக்க முடியாமல் வறுமைக்கோட்டின் கீழான வருமானத்தைப் பெறுபவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வணபிதா பீரிஸை கைது செய்ய பொலிசார் வந்தனர். ஆனால் அந்த மக்கள் அவர் தங்களுக்கு வேண்டும் என்று விரும்புகிறார்கள், ஏனென்றால் அவர்கள் தங்களது வாழ்க்கையை ஓட்டுவதற்கு வணபிதா உதவினார் என்று பெண்மணி கூறினார்.

**வணபிதா ஜீவந்த**

வணபிதா ஜீவந்த பீரிஸ் கொழும்பு காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு எதிரே முகாமிட்டிருந்த போராட்ட இயக்கத்தில் நன்கு அறியப்பட்ட முக்கியமான ஒரு பிரமுகர். அவருக்கு எதிராக பொலிசார் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்திருக்கிறார்கள். போராட்ட இயக்கத்தில் அவரின் பங்கு தொடர்பில் விசாரணை அவர்கள் நடத்த விரும்புவதால் நாட்டை விட்டு வெளியேறாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கு அவருக்கு எதிராக நீதிமன்ற உத்தரவொன்றும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

சிவில் சமூக உறுப்பினர்கள், தொழிற்சங்கவாதிகள், தொழில் வாண்மையாளர்கள் மற்றும் ஓய்வபெற்ற அரசாங்க அதிகாரிகள் என்று பலதரப்பட்டவர்களையும் உள்ளடக்கிய "சீர்திருத்தங்களுக்கான கூட்டமைப்பின் (collective for Reforms) ஒரு உறுப்பினர் என்ற வகையில் நான் போராட்ட இயக்கம் மற்றும் அதன் இலக்குகள் தொடர்பான கலந்துரையாடல்களில் பங்கேற்றிருந்தேன்.

அப்போது சந்தித்தவர்களில் வணபிதா பீரிஸும் ஒருவர். அவரில் வன்முறைச் சுபாவத்தையோ அல்லது கர்வத்தையோ நாம் காணவில்லை. கிறிஸ்தவ மதக்கோட்பாட்டினால் கடைப்பிடிக்கப்படுகின்ற மக்களுக்கு சேவைசெய்யும் தலைமைத்துவ பண்பை உருவகப்படுத்தும் ஒருவராகவே அவர் காணப்பட்டார். ஏனைய மதங்களிலும் கூட காணக்கூடியதாக இருக்கின்ற அந்த பண்பை அரசியல் தலைவர்கள் கடைப்பிடிப்பார்களாக இருந்தால் நாட்டை மாற்றிய மைக்கமுடியும்.

அதனால் வணபிதா பீரிஸ் கைது செய்யப்படக்கூடிய சாத்தியம் குறித்து கடுமையான கவலை வெளியிட்டு அவரின் சார்பில் 1640 கத்தோலிக்க மதகுருமார், கன்னியாஸ்திரிகள், குருநிலைப் படுத்தப்பட்ட சகோதரர்கள் மற்றும் சகோதரிகளும் இரத்தினபுரி பங்கின் (சப்ரகமுவ மாகாணம்) கத்தோலிக்க மதகுருவும் மனித உரிமைகள் ஆர்வலர்களும் மனுவொன்றில் கைச்சாத் திட்டமை எந்த ஆச்சரியத்தையும் தரவில்லை.

அரசாங்கத்தின் அணுகு முறை தொடர் பில் கடுமை யான கண்டனத் தொனியில் அந்த மனுவில் பின் வருமாறு கூறப்பட்டிருக்கிறது. "அவசர காலநிலைப் பிரகடனம் எதிர்க் கருத்து மீதான சகிப்புத் தன்மையின்மை பற்றி அச்சந்தரும் அரசியல் செய்தி யொன்றை சொல்கிறது. கொடூரமான அவசரகால ஒழுங்கு விதிகள் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் மற்றும் இயக்கம் நடத்துவதற்கான சுதந்திரம் ஆகியவற்றை மீறுவதாகவும் அடாத்தான கைதுகள், நீண்ட தடுப்புக் காவல்களுக்கு வழி வகுக்கக்கூடியவையாகவும் அமைகின்றன.

அவசரகால நிலையை பிரகடனம் செய்யும் ஜனாதிபதியின் தீர்மானத்தை பாராளுமன்றம் அங்கீகரித்திருக்கிறது. இது நிறைவேற்று அதிகார பீடமும் சட்டவாக்கசபையும் ஒடுக்குமுறைப் பாதையில் செல்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது."

தற்போதைய அரசாங்கம் மூன்று வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட தேர்தல்களில் பெறப்பட்ட மக்கள் ஆணையின் அடிப்படையில் சட்டரீதியாக அமைக்கப்பட்ட ஒன்றாக இருக்கின்ற போதிலும் கூட அந்த ஆணையை இழந்த நியாயப்பாடற்ற அரசாங்கமாகவே பலராலும் நோக்கப்படுகிறது. இது சட்டரீதியாக பாராளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு ஜனாதிபதியைக் கொண்ட அரசாங்கம். ஆனால் பாராளுமன்றம் ஆணையை இழந்ததாகவே காணப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் போராட்ட இயக்கத்தை கையாளுவதில் அடாவடிப்போக்கான அணுகுமுறையை கடைப்பிடிப்பது குறித்து அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டியது அவசியமாகும்.

சட்டரீதியாக அமைக்கப்பட்டதாக இருந்தாலும், நியாயப்பாடற்றதாக பலராலும் கருதப்படுகின்ற ஒரு அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்படுகின்ற ஒடுக்குமுறைப் போக்கு நாட்டில் மேலும் உறுதிப்பாடின்மையை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கிறது. அத்தகையதொரு நிலைவரத்தை நாடு தாங்காது. இலங்கை அரசியல் உறுதிப்பாடு,வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் கடப்பாடு ஆகியவற்றை கொண்டதாகவும் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற அரசாங்கம் ஒன்றைக் கொண்டதாகவும் இருந்தால் மாத்திரமே ஆதரவளிக்க முன்வரமுடியும் என்று உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஜப்பான் போன்ற நீண்டகால நட்புநாடுகளும் தெளிவாக அறிவித்துவிட்டன.



**நழுவிச்செல்லும் நம்பிக்கை**

நாட்டில் மக்களிடையே பிளவுகள் அதிகரித்துச்செல்கின்ற விரக்திமிகுந்து இந்த சூழ்நிலையில், தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளைக் கையளுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விட சிறந்த ஒருவர் இல்லை என்ற ஒரு உணர்வு படித்த மற்றும் உயர்வர்க்கத்த வர்கள் மத்தியில் காணப்படுகிறது.

புதிய ஜனாதிபதி தனது ஆற்றலை நிருபிப்பதற்கு அவகாசம் வழங்குவதற்கு வணிக சமூகமும் வசதிபடைத்த பிரிவினரும் தயாராக இருக்கிறார்கள். சமுதாயத்தின் இந்த பிரிவினர் போராட்ட இயக்கத்தின் முன்னரங் கத்துக்கு தீவிரவாதப் போக்குடை தலைமைத்துவம் வந்துவிட்டது என்று கருதி போராட்டத்தினால் ஏற்படக் கூடிய நீண்டகால விளைவுகள் குறித்து அச்சமடைந்துள்ளனர்.


ஆனால், கடுமையான எரிபொருள் நெருக்கடியும் மோசமான பணவீக்கமும் போராட்ட இயக்கம் இடைவிடாது தொடருவதற்கான ஊக்கத்தைக் கொடுக்கின்றன. தற்போது காணப்படுவது போராட்ட இயக்கத்தில் ஒரு இடையமைதியே. சட்டம் ஒழுங்கு முற்றாக சீர்குலைந்துவிடும் என்று அஞ்சும் மேற்படி பிரிவினர் அரசாங்க உறுப்பினர்களின் 70 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதை சுட்டிக்காட்டுகிறார்கள்.

தற்சமயம் ஜனாதிபதி விக்கிரமசிங்கவே பிரதான பாத்திரம். ஒரு அரசியல் தலைவர் என்ற வகையில் அவரது அனுபவமும் அறிவு முதிர்ச்சியும் உயர்வானவையாக இருக்கின்றன.

கடந்த காலத்தில் பிரதமராக இருந்த வேளைகளில் அவர் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனதற்கு ஒரு காரணத்தை கூறுவதென்றால் தனக்கு மேல் இருந்த ஜனாதிபதிகள் தனது முயற்சிகளுக்கு இடையூறாக இருந்தார்கள் என்று கூறமுடியும். அவர் பிரதமராக இருந்த காலகட்டங்களில் மக்கள் மீதான அரசாங்கத்தின் ஒடுக்கு முறை அழுத்தம் குறைப்தபட்சமாக இருப்பதை உறுதி செய்வதில் நாட்டம் காட்டினார்.

நோர்வேயின் அனுசரணையுடன் விடுதலை புலிகளுடன் போர்நிறுத்தத்தைச் செய்து சமாதான முயற்சிகளை முன்னெடுத்த கட்டத்திலும் போரின் முடிவுக்குப் பின்னரான நல்லாட்சி காலகட்டத்திலும் சரி விக்கிரமசிங்க ஒரு மென்மையான அணுகுமுறையுடனேயே ஆட்சி செய்தார். அதனால் மிதவாதப் போக்குடையதும் கருத்தொருமிப்பின் அடிப்படையிலானதுமான அரசியலில் நம்பிக்கைகொண்ட இன, மத சிறுபான்மையினங்களினதும் சிவில் சமூகத்தினதும் நம்பிக்கையை அவரால் பெறக்கூடியதாக இருந்தது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)



# இங்கிலாந்து பிரதமராக முயலும் இந்திய வம்சாவளிஅரசியல்வாதி!

ராஜன் குறை

இங்கிலாந்தின் பிரதமர் போரிஸ் ஜான்சன் பலத்த எதிர்ப்பின் காரணமாக பதவி விலகி விட்டார். ஆனால், நாடாளுமன்றத்துக்கு இன்னும் ஆயுள் இருக்கிறது. அவர் சார்ந்துள்ள கன்சர்வேடிவ் கட்சிக்குப் பெரும்பான்மை இருக்கிறது. எனவே அந்தக் கட்சி ஒரு புதிய பிரதமரைத் தேர்வு செய்ய வேண்டும். அதில் என்ன வேடிக்கை என்றால் அவர்கள் விதிமுறைகளின்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் வாக்களித்து புதிய பிரதமரைத் தேர்ந்தெடுக்க முடியாது.

கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் வாக்களித்துத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். இதைச் சொன்னவுடன் உங்களுக்கு யாராலும் மதிக்கப்படாத எம்ஜிஆர் உருவாக்கிய அதிமுகவின் கட்சி விதிமுறைகள் நினைவுக்கு வரும். அடிப்படை உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்துத்தான் பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற விதி. ஆனால் ஒரு முக்கிய வித்தியாசம் என்னவென்றால் அதிமுக போல ஒன்றரை கோடி தொண்டர்கள் என்றெல்லாம் கற்பனை கதைகள் இங்கிலாந்தில் பேசுவதில்லை.

கன்சர்வேடிவ் கட்சியின் உறுப்பினர்கள் அதிக பட்சம் போனால் இரண்டு லட்சம் பேர்தான். அநேகமாக 1.6 லட்சம் பேர்தான் என்று கூறப்படுகிறது. அந்த 1.6 அல்லது 2 லட்சம் பேர் மட்டும் வாக்களித்து அடுத்த பிரதமரைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள். அவர்கள் இப்போதிலிருந்து ஆகஸ்ட் இறுதி வரை வாக்களிக்கலாம். இணையம் வழியாகத்தான் வாக்களிக்கப் போகிறார்கள். செப்டம்பர் 5ஆம் தேதி முடிவு தெரியும்.

பிரதமர் பதவிக்கு இரண்டு பேர் போட்டியிடுகிறார்கள். ஒருவர் கருவூலத்தின் சான்சலர் என்று அழைக்கப்படும் நிதியமைச்சர். அவர்தான் இந்திய வம்சாவளியினரான, நாற்பத்தி இரண்டு வயது நிரம்பிய ரிஷி சுனாக். மற்றொருவர் வெளியுறவு அமைச்சர், நாற்பத்தேழு வயதான எலிசபெத் டிரஸ்.


இவர்கள் இருவரும் அவர்களது கொள்கைகளை விளக்கி விவாதங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். சுனாக்கைவிட, டிரஸ்தான் முன்னணியில் இருக்கிறார் என்பதை சுனாக்கே ஒப்புக்கொள்கிறார். ஆனாலும் இறுதி வரை போராடுவேன் என்கிறார். கன்சர்வேடிவ் கட்சிக்காரர்கள் மட்டும்தான் வாக்களிக்க முடியும் என்றாலும் ஒட்டுமொத்த தேசமும் அவர்கள் விவாதங்களைப் பார்க்கத்தான் வேண்டும்.

**இங்கிலாந்து அரசியலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அம்சங்கள்**

இங்கிலாந்து என்பதன் அதிகாரபூர்வமான பெயர் யுனைடெட் கிங்டம். இதில் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாண்ட், வடக்கு அயர்லாண்ட் என நான்கு நாடுகள் உள்ளன. அதனால்தான் ஒருங்கிணைந்த நாடுகள், யுனைடெட் கிங்டம் என்று பெயர். இதில் இங்கிலாந்துதான் பெரிய நாடு என்பதால் பேச்சு வழக்கில் அவ்வாறே வழங்கப்படுகிறது. இங்கிலாந்தில் கடந்த நூறாண்டுகளாக மாறி, மாறி ஆட்சி செய்யும் கட்சிகள் டோரி என்று அழைக்கப்படும் கன்சர்வேடிவ் கட்சியும், லேபர் கட்சி என்ற தொழிலாளர் கட்சியும்தான். அதற்கு முன்னால் லிபரல் கட்சியும், கன்சர்வேடிவ் கட்சியும் ஆட்சி புரிந்து வந்தன. தொழிலாளர் கட்சி முக்கியத்துவம் பெற்ற பிறகு, லிபரல் கட்சி முக்கியத்துவம் இழந்து சிறிய கட்சியாக உள்ளது. வேறு சில சிறிய கட்சிகளும் உள்ளன.

இப்போதைய கணக்கில் இங்கிலாந்தின் மக்கள் தொகை ஆறரை கோடி பேர். தமிழ்நாட்டைவிட குறைவானது.

53 லட்சம் பேர் கொண்ட ஸ்காட்லாண்ட் வெகு காலமாக தனி நாடாக இருக்க வேண்டும் என்று கோரி வருகிறது. 2014ஆம் ஆண்டு ஸ்காட்லாண்ட் சுதந்திரமடைவது குறித்து அந்த பகுதியில் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 44வீதம் பேர்



தனியாகப் போக வேண்டும் என்றும், 56 வீதம் பேர் தனியாகப் போக வேண்டாம் என்றும் வாக்களித்ததால் அது இங்கிலாந்திலேயே, அதாவது யுனைடெட் கிங்டம் என்பதிலேயே அதிக அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டு இருந்துவிட்டது. அந்த சமயத்தில் யு.கே. ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்தது. இங்கி லாந்தில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலக வேண்டும் என்ற தேசியவாத கோரிக்கை வலுவடைந்தது. அதனால் 2016 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தில் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்ற பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கைக்கு பிரெக்சிட் என்று பெயர். பெரும்பான்மை வாக்குகள் பிரெக்சிட்டிற்கு ஆதரவாகவே கிடைத்ததால் இங்கிலாந்து ஒன்றியத்திலிருந்து விலகி விட்டது. ஆனால் வெளியேறுவதற்கான நிபந்தனை கள் என்ன என்பது குறித்து பிரச்சினைகள் எழுந்தன. இதன் உச்சகட்டத்தில்தான் 2019ஆம் ஆண்டு எந்த நிபந்தனையுமின்றி வெளியேற வேண்டும் என்ற போரிஸ் ஜான்சன் கன்சர்வேடிவ் கட்சி தலைவராகப் பிரதமரானார்.

அதன் பிறகு கடந்த மூன்றாண்டுகளில் கொரோனா தொற்றும், பல்வேறு சர்ச்சைகளும் அவரை சூழ்ந்தன. பொது ஊரடங்கு காலத்தில் அரசு அலுவலகங்களில் மட்டும் பார்ட்டிகள் நடத்தப்பட்டன, அவரும் கலந்து கொண்டார் என்பது ஒரு குற்றச்சாட்டு. பதவியைப் பயன்படுத்தி தன் வீட்டை தனியார் நிறுவனத்தின் மூலம் புதுப்பித்துக் கொண்டார் என்பது ஒன்று. அவருடைய அமைச்சரவை சகா பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டது தெரிந்தும் அவருக்குப் பதவியை அளித்தார் என்பது ஒன்று. இப்படி அலை, அலையான சர்ச்சைகளின் உச்சத்தில் அவரது அமைச்சரவை சகாக் கள் எல்லாம் கூண்டோடு பதவி விலகத் தொடங்க, வேறு வழியில்லாமல் அவர் பதவி விலக முன்வந்தார். அதனால்தான் அவர் இடத்துக்கு புதிய பிரதமரைத் தேர்ந்தெடுக்க இப்போது கட்சிக்குள் தேர்தல் நடக்கிறது.

இதில் முக்கியமான செய்தி என்னவென்றால், நாடாளுமன்றக் கட்சி தலைவரான பிரதமருக்கு எதிராக பிற உறுப்பினர்கள் குரல் எழுப்பலாம் என்பதும், அது கட்சி கட்டுப்பாட்டை மீறியது ஆகாது என்பதும்தான்.

**ரிஷி சுனாக் யார்? லிஸ் டிரஸ் யார்?**

ரிஷி சுனாக்கின் பெற்றோர் பஞ்சாபிலிருந்து ஆப்பிரிக்கா வழியாக புலம் பெயர்ந்து சென்று இங்கிலாந்தில் அறுபதுகளில் குடியேறியவர்கள். அவருடைய அப்பா ஒரு மருத்துவர். அம்மா பார்மஸிஸ்ட். மத்திய தர வர்க்கமாக இருந்தாலும், பிள்ளைகளை சிறந்த பள்ளிகளில் படிக்க வைப்பதில் கவனம் செலுத்தினார்கள். ரிஷியும் நன்றாகப் படித்து, ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் பி.பி.இ எனப்படும் தத்துவம், அரசியல், பொருளாதாரம் ஆகியவை அடங்கிய பட்டம் பெற்று பின்னர் ஃபுல்பிரைட் ஸ்காலர்ஷிப்புடன் அமெரிக்காவின் ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் எம்.பி.ஏ பட்டம் பெற்றார். அங்குதான் அவர் இன்ஃபோசிஸ் நாராயண மூர்த்தியின் மகள் அக்சரா மூர்த்தியை சந்தித்தார். முதலீட்டிய நிதியாளரான ரிஷி சுனாக் விரைவிலேயே கோடீஸ்வரராக வளர்ந்தார். அக்சரா மூர்த்தியை மணந்தார். அக்சராவிடம் இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் பங்குகளில் 0.91 வீதம் இருக்கின்றன. அதன் மதிப்பு 70 கோடி பவுண்டுகள். இந்த தம்பதியினரின் சொத்தின் மதிப்பு 73 கோடி பவுண்டுகள். இங்கிலாந்தின் பணக்காரர்கள் வரிசையில் 222ஆவது இடம் இவர்களுக்கு உள்ளது.

பிரிட்டிஷ் அரசியல்வாதிகளுக்குள் இவர் பெரிய பணக்காரராகப் பார்க்கப் படுகிறார். அது இவருக்கு எதிரான ஒரு பிரச்சாரத்துக்கு வழி வகுத்துள்ளது. இவருக்கு எளிய மனிதர்களின் கஷ்டங்கள் புரியாது எனப்படுகிறது. இதற்கு பதிலாக ரிஷி எப்படி தன்னுடைய பெற்றோர் இந்தியாவிலி ருந்து வந்து கஷ்டப்பட்டு தன்னை படிக்க வைத்தார்கள் என்பதையெல்லாம் கூறி தனக்கும் எளிய மனிதர்களின் வாழ்க்கை தெரியும் என்று பிரச்சாரம் செய்கிறார்.

இங்கிலாந்தின் ஆறரைக் கோடியில் அறுதிப் பெரும்பான்மை 87 வீதம் பேர் வெள்ளை நிறத்தவர். ஆசியர் - ஆசிய வம்சாவளியினர் 6.3 வீதம். இதில் குறிப்பாக இந்திய வம்சாவளியினர் 2.3 வீதம். கிட்டத்தட்ட பதினைந்து லட்சம் பேர் இருக்கலாம். அவர்களில் ஒருவரான ரிஷி சுனக் ஆங்கிலம் பிரிட்டிஷ் காரர்களைப் போல பேசுகிறார். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலக வேண்டும் என்று தீவிர தேசியவாத பிரச்சாரம் செய்தவர்.

குடியேற்றத்துக்கு எதிரானவர். ஆனால், தன்னை இந்து என்றுதான் சொல்லிக்கொள்கிறார். கீதையின் மீதுதான் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்கிறார். இப்படி ஒரு சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த சற்றே கறுப்புத் தோல் கொண்ட ஒருவரைப் பிரதமராக ஏற்பார்களா என்ற கேள்வி இருக்கிறது. ஆனால் அவர் திறமையானவர், பொருளாதாரத்தில் கெட்டி என்று ஒரு பிரச்சாரம் இருக்கிறது.

இவரை எதிர்த்து நிற்கும் எலிசபெத் டிரஸ், ஒரு கணித பேராசிரியரான தந்தைக்கும், நர்ஸாகவும் ஆசிரியராகவும் பணிபுரிந்த அன்னைக்கும் பிறந்தவர். இருவரும் லேபர் கட்சிக்குள்ளேயே அதிக இடதுசாரி மனோபாவம் கொண்டவர்கள். ஆக்ஸ்ஃபோர்டில் ரிஷி போலவே பி.பி.இ படித்த எலிசபெத், லிபரல் டிமாக்டிக் குழுவின் தலைவராக இருந்தார். பின்னர் 1996ஆம் ஆண்டு கன்சர்வேடிவ் கட்சியில் சேர்ந்தார். கட்சியில் படிப்படியாக முன்னேறி நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சர் பொறுப்புகளுக்கும் வந்தார்.

ஒரு தீவிர வலதுசாரியாக இப்போது பணக்காரர்களுக்கு மேலும் வரிச்சலுகை அளிப்பேன் என்று பேசி வருகிறார். ஒரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால் இவர் 2016ஆம் ஆண்டு பிரெக்சிட்டுக்கு எதிராக, ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர வேண்டும் என நிலைப்பாடு எடுத்தவர். ஆனால் மக்கள் வெளியேறுவதற்கு ஆதரவாக வாக்களித்த பிறகு இவர் தீவிர பிரெக்சிட் ஆதரவாளராக மாறிவிட்டார்.

இந்த நிலையில் இருவருமே ஒரே கட்சி, ஒரே கொள்கை என்றாலும் யார் எந்த பிரச்சினைக்கு அதிக அழுத்தம் தருகிறார்கள், அவர்கள் ஆட்சித்திறன் எப்படியிருக்கிறது என்பதே கேள்வியாக இருக்கிறது. ரிஷி சுனாக் என்ற சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த, சிறுபான்மை மதத்தைச் சேர்ந்தவர் நிதியமைச்சராக உள்ளார். பிரதமர் பதவிக்கும் போட்டியிடுகிறார் என்பது முக்கியமானது. மற்ற வகையில் அவர் அரசியல் முற்போக்கு அரசியலாக இருக்காவிட்டாலும், சிறுபான்மை இனத்தவர் பிரதமராவது என்ற வகையில் அது உலக அரசியலில் முதிர்ச்சியின் அடையாளமாக இருக்கும் எனலாம். அது நடக்குமா என்பது செப்டம்பர் 5ஆம் திகதி தெரிந்துவிடும்.

---

## நமக்கு தெரிந்த முன்னைய ரணில்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)


விக்கிரமசிங்கவிலும் அவரால் சமூகத்துக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய பங்களிப்பிலும் நம்பிக்கை கொண்டவர்கள் அவரை இலங்கை ஒருபோதும் கொண்டிராத சிறந்த ஜனாதிபதியாக விளங்கியிருப்பார் என்று கூறினார்கள்.

இனவெறியும் போலி வாக்குறுதிகளும் முன்னரங்கத்தை ஆக்கிரமித்திருக்கின்ற இலங்கை ஜனநாயகத்தை விடவும் மேற்குலக ஜனநாயக நாடொன்றுக்கே அவர் கூடுதலானளவுக்கு பொருத்தமுடையவர் என்றும் அவர்கள் கூறுவார்கள். "முறைமை மாற்றத்துக்கான " வெகுஜனக் கோரிக்கைக்கு வழிவகுத்த சுயநல சக்திகளின் கைதியாக விக்கிரமசிங்க இருக்கிறார் என்பதை அவர்கள் நம்பத் தயாராக இல்லை. தாங்கள் நம்புகின்ற விக்கிரமசிங்க தற் போதைய ஊழல், தவறான நிருவாகம் மற்றும் அடாடவடித் தனம் ஆகிய வற்றை வெற்றிகொண்டு வெளிக்கிளம்புவார் என்று இன, மத சிறுபான்மை இனத்தவர்களும் பொது நலனை மையமாகக்கொண்ட அரசியலில் நம்பிக்கையுடைய பெரும்பான்மையினத்தவர்கள் மத்தியில் உள்ள பிரிவினரும் இன்றும் கூட நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். அவ்வாறு நிகழவேண்டும் என்பது இன்றியமையாததாகும். அல்லா விட்டால், அரசியல் உறுதிப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பற்றிய எதிர்பார்ப்புகள் எல்லாம் நழுவிப்போய்விடும்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........    ii) 18 , 15 , 12 , ............. , ...........

21) [ 3, 9, 14, 6, 10, 12, ] பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

...............................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

...........................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

...........................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..............................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ........ |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ........ |
| | | மொத்தப்பணம் | | | ............ | ........ |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

..................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



..................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

..................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)     2)     3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி    2) இரணைமடுக்குளம்    3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்    2) உதிப்பு    3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்    2) வாளேந்திய சிங்கம்    3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976    2) 1851    3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு    2) இறப்பர், தாழம்பூ    3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

18. 1) 6    2) 8    19. $\frac{3}{10}$
20. 1) 128, 130    2) 9, 6
21. 3, 6, 9, 12
22. 745    23. 455
24. 1l 100ml / 1100ml    25. ரூபாய் 144.00
26. 1) 190    2) 100    3) 290
27. 15 : 30    28. 5m 50cm / 550cm
29. 36 பூக்கள்
30. 1    31. 2    32. 3
33. 2    34. 3    35. 2

### கல்வி tv CHANNEL-1

**03.08.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2

**03.08.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# தமிழர்களின் சாபமே இன்று சிங்களவர்களின் கோபமாக மாறி ராஜபக்ஷக்களை விரட்டியது!

## தமிழ் உணர்வாளர் அமைப்பு கூறுகிறது

**மட்டக்களப்பு, ஓக. 03**

**தமிழர்களின் சாபமே இன்று சிங்களவர்களின் கோபமாக மாறியுள்ளது. இலங்கையின் அடையாளமாக, ராஜமுத்திரையாக பார்க்கப்பட்ட ராஜபக்ஸக்கள் தமிழர்களின் சாபம் காரணமாக இலங்கையின் அசிங்கமான சின்னமாக மாற்றப்பட்டுள்ளார்கள் என தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் தெரிவித்தார்.**

நேற்று முன் தினம் இரவு மட்டக்களப்பு, செங்கலடியில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் பயங்கரவாத தடைச்சட்ட திருத்தம் கொண்டுவரப்பட்டிருந்தது. அதன்மூலமும் தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு விமோசனம் கிடைத்ததாக தெரியவில்லை. பயங்கரவாத தடைச்சட்டம் இலங்கையில் முற்றாக நீக்கப்படவேண்டும் ஏராளமான தமிழ் கைதிகள் இன்னும் சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள்.

புதிய அரசாங்கத்தை அமைத்துள்ள ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ் உணர்வாளர் அமைப்பு பயங்கரவாத தடைச்சட்ட உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றது.

பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையுடன் நாடளாவிய ரீதியில் தமிழ் தேசிய கூட்டமைப்பினால் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதன் பின்னர் என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்காக தமிழ் மக்களில் நலன்கொண்ட அனைத்து அரசியல்வாதிகளும் இணைந்து குரல்கொடுக்கவேண்டும். தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தெளிவூட்டல் அவசியமாகயிருக்கின்றது. அரசியல் தெளிவின்மை காரணமாகத்தான் சமூகத்திற்கு தேவையற்றவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்படும் நிலை காணப்படுகின்றது.

கிராமம் கிராமமாக சென்று வாக்கு பலத்தினால் மக்கள் எதனை சாதிக்க முடியும் என்பதை தெளிவுபடுத்தவேண்டிய தேவையுள்ளது. அந்த தெளிவூட்டல் செயற்பாடுகளை அடுத்த கட்டமாக முன்னெடுக்கவுள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் எங்களுக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும் இன்று தமிழ் சமூகத்தின் முன்னிலை கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணப்படுகின்றது. எந்த நாடுகள் தமிழ் மக்களின் நலன் தொடர்பில் பேசுவதற்கான அமைப்பாக அது காணப்படுகின்றது.

தமிழர்களின் உரிமைசார்ந்த விடயங்களில் அவர்கள் பின்வாங்கக்கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். வடகிழக்கு இணைப்பு என்ற விடயத்தில் எந்தவித விட்டுக்கொடுப்புக்கும் இடமிருக்ககூடாது. வடகிழக்கு இணைந்து கிழக்கு மாகாணம் தனித்துவமாகயிருக்க வேண்டும் என்பதையே நாங்கள் விரும்புகின்றோம்-என்றார். (அ)

# அதிகாலையில் இரண்டு பேர் 1,500 லீற்றர் டீசலுடன் கைது!

மட்டக்களப்பு, ஓக. 03

நிந்தவூரிலிருந்து கொண்டுவரப்பட்ட 1,500 லீட்டர் டீசலுடன் இருவர், நேற்று முன் தினம் அதிகாலை காரைதீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்கள்.

காரைதீவு பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர் .எஸ் . ஜெகத் தலைமையிலான குழுவினர் அதிரடியாக அவர்களை அதிகாலை 12 .27 மணியளவில் மடக்கிப் பிடித்தனர்.

காரைதீவு பிரதான வீதி விபுலானந்த சதுக்கத்தில் உள்ள பொலிஸ் சாவடி ஊடாக குறித்த 1,500 லீற்றர் டீசலை ஏற்றிய வாகனம் செல்லுகையில், அதனை நிறுத்தி சோதனை செய்யும்போது, இந்த டீசல் கடத்தல் பிடிபட்டது.

நிந்தவூரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் இருந்து மாளிகைக்காட்டுக்கு கொண்டு செல்லப்பட்ட வேளையில் இவ் அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கடத்தலில் ஈடுபட்டதாக கூறப்படும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கல்முனை மாநகர ஆணையாளர் அன்சாருக்கு பிடியாணை உத்தரவு!

அம்பாறை, ஓக. 03

கல்முனை மாநகர ஆணையாளர் எம்.சீ அன் சாருக்கு எதிராக கல்முனை நீதவான் நீதிமன் றினால் நேறு செவ்வாய்க்கிழமை பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட கல்முனை மற்றும் சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களில் துர்நாற்றம் வீசுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பில் கல்முனை மாநகர சபை உறுப்பினரான சட்டத்தரணி ரோசன் அக்தாரினால் கல்முனை நீதவான் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் கல்முனை மாநகர ஆணையளர் உள்ளிட்ட எட்டு பேர் பிரதி வாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு மீதான விசாரணை நேற்று செவ்வாய்க் கிழமை கல்முனை நீதவான் எம்.எஸ்.எம். சம் சுதீன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, பிரதிவாதியான கல்முனை மாநகர ஆணையாளர் எம்.சீ.அன்சார் மன்றில் ஆஜராகவில்லை. இதனால், அவருக்கு எதிராக கல்முனை நீதவானினால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனையடுத்து, குறித்த வழக்கு செப்டம்பர் 13ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (அ)

# ஓட்டோக்கள் பதிவு

மட்டக்களப்பு, ஓக. 03

எரிபொருள்களைப் பெறுவதற்காக ஓட்டோக்களை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யும் நடவடிக்கைகள், மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் இந்த நடவடிக்கை இடம்பெற்று வருவதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தந்தப் பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு அந்தந்தப் பிரதேச பொலிஸ் நிலையங்களில் ஓட்டோக்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற உத்தரவுக்கேற்ப இந்த நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதனடிப்படையில், ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள ஓட்டோக்களை ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு, ஓக. 03

அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஹொரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த பிரதேசத்துக்கு சென்று சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 150 மில்லிகிராம் ஹொரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் அக்கரைப்பற்று மாவட்ட,நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச். எம்.ஹம்ஸா முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர் படுத்தியபோது சந்தேக நபரை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

மட்டக்களப்பு, ஓக. 03

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் அதிகரித்து வருகின்றது. கடந்த ஜூலை 18ஆம் திகதி தொடக் கம் 24ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 12 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்குள்ளாகியுள்ளதுடன், இவ்வாண்டில் மொத் தமாக 901 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ. சுகுணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவ்வருடம் எமது மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றமை தரவுகள் மூலம் கணிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நோயின் தாக்கத்தை உணர்ந்து பொதுமக்கள் மிகவும் விழிப்புணர்வுடன் செயற்படுவதுடன் வீடுகளில் நீர் தேங்கியிருக்கும் இடங்களை அகற்றி, டெங்கு நுளம்புகள்பெருகுவதை தடுத்து, எமது சுற்றுப்புற சூழலை சுகாதார முறையில் பேணுவது எமது கடமை யாகும்.

பெறுமதியான மனித உயிரை பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றாய் செயற் பட்டு, எமது நாட்டில் இருந்து டெங்குவை ஒழிப்பதற்கு ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூண வேண்டி யது காலத்தின் கட்டாயமா கும்-என்றார். (அ)

# அட்டாளைச்சேனை கூட்டுறவுச் சங்கத்தின் ஊழல், மோசடி குறித்து ஆவணம் கையளிப்பு

மட்டக்களப்பு, ஓக. 03

அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பில் சமூக ஆர்வலர்கள் இணைந்து கிழக்கு மாகாண ஆளுநருக்கு வழங்கிய முறைப்பாட்டிற்கமைவாக, அது தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கூட்டுறவுத் திணைக்கள மாகாண ஆணையாளருக்கு ஆளுநர் பணிப்புரை வழங்கியிருந்தார்.

அதற்கமைவாக, மாகாண ஆணையாளரினால் குறித்த விடயம் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டு அவ்விடயம் தொடர்பில் முறைப்பாட்டாளர் களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

முறைப்பாட்டாளர்கள் தங்களது முறைப்பாடுகளை வழங்கியுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக இன்னும் பல ஆவணங்களை சமூக ஆர்வலர்களான அஸ்வர் ஷாலி, எம்.ரீ.ஹானிம், யூ.எல்.நிசார் உள்ளிட்ட பலர் கூட்டுறவு அபிவிருத்தி பிராந்திய அலுவலகத்திற்குச் சென்று பிரதம கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.பரீடிடம் கையளித்தனர். (அ)

# தாய்வான் மீது சீனா தாக்குதல் நடத்தலாம்

## வெள்ளை மாளிகை எச்சரிக்கை

வொஷிங்ரன், ஓக. 03

**அமெரிக்க பாராளுமன்ற அவைத்தலைவர் நான்சி பெலோசியின் உத்தேச தாய்வான் பயணத் திட்டம் சீன இராணுவத்தை ஆத்திரமூட்டியுள்ள நிலையில் பெலோசி தாய்வான் சென்றால் சீனா பதிலடி கொடுக்கக்கூடும் என அமெரிக்க ஜனாதிபதி மாளிகையான வெள்ளை மாளிகை எச்சரித்துள்ளது.**

தாய்வான் அருகே ஏவுகணைகளை வீசுவது அல்லது பெரிய அளவிலான வான் அல்லது கடற்படை நடவடிக்கைகளை முன்னெடுப்படுப்பது போன்ற பதிலடிகளை சீனா மேற்கொள்ளலாம் என வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி கூறினார்.

அமெரிக்க பாராளுமன்ற அவைத் தலைவர் திருமதி பெலோசி ஆசிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது அவர் தாய்வானுக்கும் செல்வார் என தாய்வான் மற்றும் அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. எனினும் பெலோசியின் தாய்வான் பயணத் குறித்து அமெரிக்க அரசாங்கம் இது வரை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை.

தாய்வான் சீனாவின் ஒரு பிராந்தியம் என பீஜிங் உரிமை கோரி வருகிறது.

இந்நிலையில் நான்சி பெலோசியின் தாய்வானுக்கான பணத்தை தொடர அமெரிக்கா வலியுறுத்தினால் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்க உறுதியான மற்றும் வலுவான நடவடிக்கைகளை சீனா எடுக்கும் என்று சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் பீஜிங்கில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது கூறினார்.

பெலோசியின் தாய்வானுக்கான உத்தேச பயணத்திற்கு உறுதியான எதிர்ப்பை அமெரிக்கத் தரப்பிற்கு பலமுறை சீனா தெளிவுபடுத்தியுள்ளது. அதை மீறி பெலோசி தாய்வான் பயணம் செய்தால் அதனால் ஏற்படும் கடுமையான விளைவுகளுக்கு அமெரிக்கா முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் தெரிவித்தார்.

இதேவேளை, பெலோசி தாய்வான் செல்ல முடிவெடுத்தால் சீனத் தாக்குதல் அபாயத்திலிருந்து அவரைப் பாதுகாப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ளும் என பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாய்வானுக்கு நான்சி பெலோசி சென்றால் 1997 ஆம் ஆண்டுக்குப் பிறகு அங்கு செல்லும் அமெரிக்க உயர்நிலை மக்கள் பிரதிநிதியாக அவர் இருப்பார்.

அந்த வகையில், அவருக்கு அங்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியது படைகளின் கடமையாகும். அவர் பயணம் மேற்கொள்வது தாய்வான் என்பதால், அபாயம் குறைந்த மற்ற நாடுகளில் அளிக்கப்படும் பாதுகாப்பை விட அங்கு அவருக்கு கூடுதலாக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நான்சி பெலோசி செல்லும் விமானத்தின் மீது சீனா தாக்குதல் நடத்தும் என்று அதிகாரிகள் கருதவில்லை. எனினும், தாய்வான் மிகவும் சர்ச்சைக்குரிய பகுதி என்பதால் தவறான புரிதல்கள், கணிப்புகள் போன்ற காரணங்களால் நிலைமை மோசம் அடைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அவற்றைத் தவிர்ப்பதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்படும்.

நான்சி பெலோசி தாய்வான் செல்வது உறுதியானால், இந்தப் பிராந்தியத்தில் கண்காணிப்பு விமானங்கள் போன்ற பாதுகாப்பு வசதிகள் அதிகரிக்கப்படும் எனவும் அமெரிக்க பாதுகாப்புத் துறையினர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ரஷ்யாவுக்கு அமெரிக்கா மிகப்பெரும் அச்சுறுத்தல்

## ஜனாதிபதி புடின் தெரிவிப்பு

மொஸ்கோ, ஓக. 03

ரஷ்யாவுக்கு அமெரிக்கா மிகப்பெரும் அச்சுறுத்தலாக உள்ளதாக ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய கடற்படை தினத்தை முன்னிட்டு புனித பீற்றர்ஸ் பேர்க் நகரில் நடைபெற்ற போர்க்கப்பல்களின் அணிவகுப்பு மரியாதையை புடின் ஏற்றுக்கொண்டார்.

இதனைத்தொடர்ந்து அங்கு கருத்து வெளியிடும் போதே விளாடிமிர் புடின் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலகில் உள்ள அனைத்து பெருங்கடல்களிலும் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்த நினைப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேட்டோ படைகளின் கூட்டமைப்பில் ரஷ்ய எல்லையில் உள்ள நாடுகள் இணைவது



நாட்டிற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒலியை விட 9 மடங்கு வேகமாக செல்லக்கூடிய ஜிர்கான் ஹைபர்சானிக் ஏவுகணைகள் விரைவில் ரஷ்ய கடற்படையில் இணைக்கப்படும் எனவும் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார். (அ)

# இரண்டரை ஆண்டுகளின் பின் நியூசிலாந்தின் எல்லை திறப்பு




வெலிங்ரன், ஓக. 03

நியூசிலாந்து, பயணிகளுக்கு அதன் எல்லைகளை முழுமையாகத் திறந்துவிட்டுள்ளது.

கொவிட்-19 வைரஸ் பரவல் ஆரம்பித்த வேளையில், 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அது தனது எல்லைகளை மூடியது. அதன் பின்னர் வைரஸ் பரவல் குறைய ஆரம்பித்ததும் கடந்த பெப்ரவரி மாதம் முதல் படிப்படியாக அது எல்லையைத் திறந்துவிட்டது.

இருப்பினும் விஸா அனுமதி தேவைப்படுவோர், மாணவர் விஸா அனுமதியில் இருப்போர் ஆகியோர் நாட்டுக்குள் நுழைய முடியாமல் இருந்தது. கடந்த ஞாயிறு இரவு முதல் அவர்களுக்கான கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன.

மேலும் சொகுசுக் கப்பல்கள், உல்லாசப் பாய்மரப் படகுகள் ஆகியவை நியூசிலாந்துக் கரைகளை அடையவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்துப் பொருளாதாரத்தின் வளத்துக்கு முக்கிய பங்களிப்பவர்கள் வெளிநாட்டு மாணவர்கள்.

எல்லைகள் திறந்துவிட்டதால் இனி பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் சேருவோர் எண்ணிக்கை அதிகரிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

உலக நாடுகளில் பல எல்லைகளை முழுமையாகத் திறந்த பின்னரும் நியூசிலாந்து பொறுமையாக, படிப்படியாகவே அதைச் செய்தது. (அ)

# கனமழை, வெள்ளத்தில் சிக்கி பாகிஸ்தானில் 320 பேர் மரணம்!

இஸ்லாமாபாத், ஓக. 03

பாகிஸ்தானில் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 320ஆக அதிகரித்துள்ள நிலையில், வெள்ளம் சூழ்ந்த பகுதிகளை பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் பார்வையிட்டார்.



கடந்த 5 வாரங்களாக பெய்துவரும் தொடர் கனமழையால் மிகவும் பாதிக்கப்பட்ட பலுசிஸ்தான் மாகாணத்தில் சுமார் 13,000 வீடுகள் வெள்ளத்தில் முழுமையாக மூழ்கியுள்ளன.

இதுவரை அந்த மாகாணத்தில் 46 சிறுவர்கள் உள்பட 127 பேரும், கராச்சி, சிந்து மாகாணங்களில் 70 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே, பலுசிஸ்தான் மாகாணத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. 30 கிலோமீட்டர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.6 அலகுகளாக பதிவாகியுள்ளது. (அ)

# ரஷ்யத் தாக்குதலில் உக்ரைனின் பிரபல தொழிலதிபர் உயிரிழப்பு!

கீவ், ஓக. 03

உக்ரைனின் ஹீரோ விருது வாங்கிய பணக்கார தொழிலதிபரான ஒலெக்சி வடாதுர்ஸ்கை மற்றும் அவரது மனைவி ரஷ்ய ஏவுகணைத் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர்.

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போரானது 5 மாதங்களை கடந்து தொடர்ந்து வருகிறது. உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் கோதுமை உள்ளிட்ட தானிய ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கின்றன.

இந்த சூழலில், இரு நாடுகள் இடையேயான போரால் உணவு பொருட்களின் விலைவாசி உலக அளவில் உயர்ந்து உள்ளது. இந் நிலையில், உக்ரைனின் தெற்கு நகரான மிகோலைவ் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியது. இதில், உக்ரைனின் ஹீரோ விருது வாங்கியுள்ள அந்நாட்டின் பணக்கார தொழிலதிபரான ஒலெக்சி வடாதுர்ஸ்கை (வயது 74) மற்றும் அவரது மனைவி ரெய்சா ஆகிய இருவரும் வீட்டில் இருக்கும்போது, ரஷிய ஏவுகணை தாக்குதலில் உயிரிழந்து உள்ளனர்.

ஒலெக்சி, தானிய ஏற்றுமதிக்கான நிபுலான் என்ற நிறுவனமும் நடத்தி வருகிறார். ஒலெக்சியின் நிபுலான் நிறுவனம் தான் உக்ரைனின் மிகப்பெரிய தானிய ஏற்றுமதி நிறுவனமாகும்.

கோதுமை, சோளம் உள்பட பல்வேறு தானியங்களை இந்த நிறுவனம் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இந்நிலையில், அவரது மறைவு நாட்டுக்கு பேரிழப்பு என அதிபர் ஜெலன்ஸ்கி வருத்தம் தெரிவித்து உள்ளார். எனினும், மிகோலைவ் நகர மேயர் அலெக்சாண்டர் சென்கெவிச் கூறும்போது, ரஷ்யாவின் மிக பெரிய தாக்குதல் இது என குறிப்பிட்டார்.

அதிபரின் ஆலோசகர் மிகைலோ பொடோலியாக் கூறும்போது, உள்நோக்கத்துடனேயே தொழிலதிபரை இலக்காக கொண்டு ரஷ்யா தாக்குதல் நடத்தி உள்ளது.

தொழிலதிபரின் படுக்கையறையை ஏவுகணைகளில் ஒன்று தாக்கி உள்ளது. இதனை வைத்து பார்க்கும்போது, இது திட்டமிட்ட தாக்குதல் என சந்தேகமின்றி தெரிய வருகிறது என கூறியுள்ளார். ரஷ்யாவின் ஏவுகணை தாக்குதலில் ஹோட்டல் ஒன்று, விளையாட்டு வளாகம், 2 பள்ளிக் கூடங்கள் மற்றும் பல வீடுகளும் சேதமடைந்துள்ளன. (அ)

# இந்தியாவை வீழ்த்தியது மேற்கிந்தியத் தீவுகள்!

சென். கிட்ஸ், ஒக. 03

இரண்டாவது இருபது -20 போட்டியில் இந்திய அணியை வீழ்த்தி ஐந்து விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்றது மேற்கிந்திய தீவுகள் அணி.

இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது.

முன்னதாக நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கில் வென்றது இந்தியா. இந்நிலையில், இரு அணிகளும் தற்போது 5 போட்டிகள் கொண்ட இருபது -20 தொடரில் விளையாடி வருகின்றன.

முதல் போட்டியில் இந்திய அணி வென்ற நிலையில் இரண்டாவது போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

இந்திய அணிக்கு ரோஹித்தும், சூர்யகுமார் யாதவும் தொடக்கம் கொடுத்தனர். ஆட்டத்தின் முதல் பந்தே இந்தியாவுக்கு அதிர்ச்சி கொடுத்தார் ஒபேட் மக்காய். அவரின் முதல் பந்தில் அணித் தலைவர் ரோஹித் சர்மா "டக்-அவுட் "ஆனார். இதேபோல் மக்காய் தனது அடுத்த ஓவரின் முதல் பந்தில் 11 ஓட்டங்கள் எடுத்திருந்த சூர்யகுமார் யாதவையும் சாய்த்தார். குறிப்பாக, மக்காய் தான் வீசிய நான்கு ஓவர்களில் 6 விக்கெட்கள் எடுத்து இந்தியாவுக்கு அதிர்ச்சி கொடுத்தார்.

தனது மூன்றாவது ஓவரில் ரவீந்திர ஜடேஜாவை ஆட்டமிழக்க செய்தவர் நான்காவது ஓவரில் மட்டும் தினேஷ் கார்த்திக், அஸ்வின், புவனேஷ்வர் குமார் என மூன்று பேரை வெளியேறினார். அவரின் அபார பந்துவீச்சால் இந்திய அணி 19.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 138 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.



இந்தியாவை பொறுத்தவரை முன்னணி வீரர்களில் ஹார்திக் பாண்ட்யா 31 ஓட்டங்களும், ஜடேஜா 27 ஓட்டங்களும், பந்த் 24 ஓட்டங்களும் அதிகபட்சமாக எடுத்தனர். மற்றவர்கள் சொதப்பினர். ஒபேட் மக்காய், நான்கு ஓவர்களை வீசி அதில் ஓர் ஓட்டமற்ற ஓவருடன் மொத்தம் 6 விக்கெட்கள் வீழ்த்தினர்.

எளிய இலக்கை நோக்கிக் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு பிரண்டன் கிங் சிறப்பான தொடக்கம் கொடுத்தார். கைல் மேயர்ஸ், நிகோலஸ் பூரண், ஷிம்ரோன் ஹெட்மேயர் போன்ற முன்னணி வீரர்கள் வருவதும் போவதுமாக இருந்தாலும், பிரண்டன் கிங் ஒற்றை ஆளாக 68 ஓட்டங்கள் சேர்த்தார். அவருக்கு பக்கபலமாக விக்கெட் காப்பாளர் டேவான் தோமஸ் 31 ஓட்டங்கள் சேர்க்க மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றியை நோக்கி முன்னேறியது. இந்திய பந்துவீச்சாளர்கள் விக்கெட்களை கைப்பற்றாவிடினும், ஓட்டம் வழங்குவதைக் கட்டுப்படுத்தி கடைசி ஓவர் வரை கொண்டு வந்தனர்.

கடைசி ஓவரில் மேற்கிந்திய தீவுகள் வெற்றிக்கு 10 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இந்த ஓவரை ஆவேஷ் கான் பந்துவீசினார். அதுவரை இரண்டு ஓவர்கள் வீசி ஒரு விக்கெட் உடன் 19 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து நல்ல பந்துவீச்சை வெளிப்படுத்திய ஆவேஷ் கான் கடைசி ஓவரின் முதல் பந்தை யோர்க்கராக வீசி ஓட்டம் சேர்ப்பதை கட்டுப்படுத்தினர். ஆனால், அந்தப் பந்து முறையற்றதாக மாறியதால் "ப்ரீ ஹிட்" கொடுக்கப்பட்டது. இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்ட டேவான் தோமஸ் அடுத்த இரண்டு பந்துகளில் ஒரு சிக்ஸர் மற்றும் ஒரு பௌண்ட்ரி அடித்து மேற்கிந்திய தீவுகள் அணியை வெற்றிபெற வைத்தார்.

இறுதியாக ஐந்து விக்கெட்கள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி இந்தத் தொடரில் முதல் வெற்றியை பதிவு செய்தது. இதன் மூலம் தற்போது இரு அணிகளும் 1-1 தொடரில் சமநிலையில் உள்ளது.



## கோலி, ரோஹித்துடன் இணைந்த மந்தனா!

பர்மிங்ஹாம், ஒக. 03

துரத்தியடிக்கும் போட்டியில் ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்த இந்திய வீரர்கள் பட்டியலில் கோலி, ரோஹித்துடன் இணைந்துள்ளார் ஸ்மிருதி மந்தனா.


72 நாடுகள் பங்கேற்றுள்ள 22ஆவது பொதுநலவாய விளையாட்டு போட்டி இங்கிலாந்தின் பர்மிங்ஹாம் நகரில் கோலாகலமாக நடைபெற்று வருகிறது.

இதில், இந்திய அணி பாகிஸ்தான் அணியை எதிர்கொண்டதுடன் போட்டியையும் வெற்றி கொண்டது.

இந்தப் போட்டியில், ஸ்மிரிதி மந்தனா அரைச்சதம் அடித்ததன் மூலம் விராட் கோலி மற்றும் ரோஹித் சர்மாவுடன் சாதனை பட்டியலில் இணைந்துள்ளார்.

இருபது -20 கிரிக்கெட்டில் துரத்தியடித்தலில் விராட் கோலி மற்றும் ரோஹித் சர்மாவுக்குப் பிறகு ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் கடந்த மூன்றாவது இந்திய துடுப்பாட்ட வீரர் என்ற பெருமையை மந்தனா பெற்றுள்ளார்.

மந்தனா 1059 ஓட்டங்களுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார். கோலி மற்றும் ரோஹித் முறையே 1789 மற்றும் 1375 ஓட்டங்கள் குவித்துள்ளனர். (ஐ)



## இகா ஸ்வியாரெக்கின் தொடர் வெற்றிக்கு முடிவு

லண்டன், ஒக. 03

உலகின் முதல் வீராங்கனையாகவும் களிமண் தரையில் சிறந்த வீராங்கனையாகவும் உள்ள இகா ஸ்வியாரெக்கின் தொடர் வெற்றிப் பயணம் முடிவுக்கு வந்தது.

அவர் சொந்த மண்ணில் நடந்த போட்டியில் தோல்வியை தழுவியதன் மூலம் 18 வெற்றிகள் என்ற அவரின் தொடர் வெற்றி முடிவுக்கு வந்தது.

21 வயதான போலந்தின் ஸ்வியாரெக் ரோம், பிரெஞ்சு பட்டங்களை வென்றிருந்தார். போலந்து ஓப்பன் போட்டியில் அவர் கார்சியாவிடம் 6 -1, 1 - 6, 6 - 4 என்ற செற்களில் ஸ்வியாரெக் தோல்வியடைந்தார்.

## தோல்வியில் முடிந்தது ரோஹித்தின் பரீட்சார்த்தம்!

சென். கிட்ஸ், ஒக. 03

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது இருபது - 20 போட்டியில் மேற்கிந்தியா வென்றது.

இந்தப் போட்டியில் புவனேஸ்வர் குமார் 2 ஓவர் களை மட்டுமே வீசினார். கடைசி 5 ஓவர்களில் 4 ஓவர்களை ஆவேஷ் கானும் அர்ஷ்தீப் சிங்கும் வீசினார்கள். 3ஆவது ஓவருக்குப் பிறகு புவனேஸ்வர் குமார் பந்துவீசவே வரவில்லை. கடைசி ஓவரில் மே.இ. தீவுகளுக்கு 10 ஓட்டங்கள் தேவைப்பட்டபோது ஆவேஷ் கான் அந்த ஓவரை வீசினார்.

முறையற்ற பந்தை வீசி, அதில் ஒரு சிக்ஸரும் ஒரு பௌண்ட்ரியும் கொடுத்து தனது முயற்சியில் தோற்றார். இதனால் ரோஹித் சர்மா விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளார்.

இதுபற்றி ரோஹித் சர்மா கூறுகையில், இளம் வீரர்களுக்கு நாம் வாய்ப்பளிக்க வேண்டும். புவனேஸ்வர் குமாரால் என்ன செய்யமுடியும் என நமக்குத் தெரியும். ஆனால் அர்ஷ்தீப் சிங்குக்கும் அவேஷ் கானுக்கும் வாய்ப்பு தராவிட்டால் கடைசி ஓவரில் அவர்கள் எப்படிப் பந்துவீசுவார்கள் என்பது நமக்குத் தெரியாமலே போய்விடும். அவர்களுக்கு வாய்ப்பும் ஆதரவும் அளிக்கப்படவேண்டும் - என்றார்.

## மேற்கிந்தியாவின் மக்காய் புதிய சாதனைகள் படைப்பு

சென். கிட்ஸ், ஒக. 03

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது இருபது -20 போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. இந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சாளர் மக்காய் இரு புதிய சாதனைகளை படைத்துள்ளார்.



இதில், மே.இ. தீவுகள் அணியின் 25 வயது இடது கை வேகப்பந்து வீச்சாளர் ஒபட் மக்காய், இதுவரை 2 ஒருநாள், 18 இருபது -20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இந்தப் போட்டியில் அவர் 4 ஓவர்கள் வீசி 17 ஓட்டங்கள் கொடுத்து 6 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் மிகச்சிறந்த இருபது -20 பந்துவீச்சு மற்றும் இந்தியாவுக்கு எதிரான மிகச்சிறந்த இருபது - 20 பந்துவீச்சு என இரு முக்கிய சாதனைகளைப் படைத்துள்ளார் ஒபட் மக்காய். இந்தியாவுக்கு எதிராக இருபது - 20 போட்டியில் 5 விக்கெட்களை எடுத்த முதல் பந்துவீச்சாளரும் மக்காய்தான்.

# அதிகாரிகள் மீது குற்றம் நிரூபிக்கப்படின் இடமாற்றம் கிடையாது; தண்டனைதான்!

## வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 03

**வடக்கு அரச அதிகாரிகள் மீது ஒழுக்காற்று விசாரணையின்போது குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனை அல்லது பதவி நீக்கம் செய்யப்படுமே அல்லாமல் இடமாற்றம் வழங்கப்படமாட்டாது என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.**

நேற்று செவ்வாய்க்கிழமை அவர் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அரச அதிகாரிகள் மீது யாராவது ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுகள் முன்வைத்தால் ஆளுநர் என்ற நீதியில் ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படும்.

விசாரணை ஒன்றின் அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது தண்டனை அல்லது சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்படும்.

அரச உத்தியோகத்தர்கள் சேவையின் நிமித்தம் இடமாற்றத்துக்கு உரித்துடையவர்கள். அவர்களின் இடமாற்றம் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் விசேட சேவை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும்.

மாகாண இடமாற்றங்கள், நியமனங்கள் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுமே அல்லாமல் ஒழுக்காற்று விசாரணையால் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படாது. ஆளுநரால் மேற்கொள்ளப் படும் அதிவிசேட சிறப்பு தர அதிகாரிகளின் நியமனத்தை ஆளுநரால் திரும்ப பெற முடியும்-என்றுள்ளது. (அ)

# கடலட்டை பிடித்த 15 பேருக்கு நீதிமன்றம் தண்டம் விதித்தது

கிளிநொச்சி, ஒக. 03

கிளிநொச்சி நாச்சிக்குடா பகுதியில் அனுமதிக்கப்படாத இரவு நேரத்தில் வெளிச்சம் பாச்சி கடலட்டை பிடித்த 15 பேருக்கு தலா பத்தாயிரம் மற்றும் பதினைந்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டத்துக்கு முரணான வகையில் அனுமதிக்கப்படாத இரவு வேலைகளில் வெளிச்சம் பாச்சி கடலட்டை பிடித்த 15 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்த கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் சந்தேகநபர்களை முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

இதன்போது ஒருவருக்கு பதினைந்தாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

இதேவேளை தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட ஒருவருக்கு பத்தாயிரம் ரூபாய் தண்டபணம் விதிக்கப்பட்டது. (அ)

# நாடு திரும்பும் கோட்டாபயவை அரசுதான் பாதுகாக்கவேண்டும்

## கூறுகிறார் சாகர காரியவசம்

கொழும்பு, ஒக. 30

"முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பினால் அவரை அரசுதான் பாதுகாக்க வேண்டும்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

"முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாடு திரும்புவதற்குப் பொருத்தமான நேரம் இதுவல்ல. அவர் இந்த நேரத்தில் நாட்டுக்கு வந்தால் அரசியல் ரீதியிலான பிரச்சினைகள் ஏற்படலாம்" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலே, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளரின் மேற்படி கருத்து வெளியாகியுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைப் பிரஜை. இங்கு வருவதற்கான உரிமை அவருக்கு உள்ளது. முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அவருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. எனவே, அவர் நாடு திரும்பினால் அவரை அரசுதான் பாதுகாக்க வேண்டும்-என்றார். (அ)

# கிணற்றிலிருந்து பெண் நேற்று சடலமாக மீட்பு!

மட்டக்களப்பு, ஒக. 03

மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பாலமீன்மடு பிரதேசத்தில் அமைந்துள்ள வீடு ஒன்றின் கிணற்றில் இருந்து வயோதிபபெண் ஒருவர், சடலமாக நேற்று கண்டெடுக்கப்பட்டதாக கொக்குவில் பொலிசார் தெரிவித்தனர்

மட்டக்களப்பு வெளிச்ச வீட்டு வீதி, பாலமீன்மடு பிரதேசத்தைச் சேர்ந்த 79 வயதுடைய வள்ளித்தங்கம் கந்தசாமி என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனிமையில் வசித்துவந்த குறித்த வயோதிபப்பெண்ணின் பிள்ளைகள், நேற்று காலை அங்கு சென்றபோது குறித்த பெண்ணை காணாத நிலையில் அங்கு தேடியபோது, கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்த நிலையில் இருப்பதை கண்டு பொலிஸாருக்கு தெரிவித்தனர்.

இதனையடுத்து நீதிமன்ற அனுமதியை பெற்று கிணற்றில் இருந்து சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டனர். (அ)

# 2,740 லீற்றர் டீசலுடன் நான்கு பேர் கந்தளாயில் பொலிஸாரால் கைது

திருமலை, ஒக. 03

திருகோணமலை-கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தளாய் 87 பகுதியில் வைத்து 2,740 லீற்றர் டீசலுடன் நான்கு பேர் நேற்று முன் தினம் மாலை கைது செய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர்கள் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக குறித்த டீசலை கந்தளாய் டிப்போவில் இருந்து பொலனறுவை ஹிங்குராகொடைக்கு எடுத்துச் செல்லும்போது லொறியின் சாரதி உட்பட நான்கு பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் டீசல் கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட லொறி கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கிணற்றில் விழுந்த யானை

திருமலை, ஒக. 03

திருகோணமலை - கந்தளாய் சூரியபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விவசாய பகுதியில் காட்டு யானையொன்று கிணற்றில் தவறி விழுந்துள்ளது.

12 வயதுடைய யானைக் குட்டியொன்றே நேற்று முன்தினம் மாலை கிணற்றுக்குள் விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னக்காடு பகுதியிலிருந்து உணவு தேடி சூரியபுர கிராமத்திற்கு வந்த காட்டு யானை மீண்டும் வனப்பகுதிக்குள் சென்று கொண்டிருந்தபோது பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்ததாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர். சூரியபுர பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினர் கிராம மக்களுடன் இணைந்து வெட்டப்பட்ட கிணற்றில் இருந்த குறித்த யானை பெக்கோ இயந்திரம் மூலம் மீட்கப்பட்டு சுன்னக் காட்டிற்குள் விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கோதுமை மா தட்டுப்பாடு

கொழும்பு, ஒக. 03

பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களுக்குப் பயன்படுத்தப்படும் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்தன தெரிவித்தார்.

எரிபொருள் நெருக்கடியால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், திருகோணமலையிலிருந்து கொழும்புக்கு 50 கிலோகிராம் கோதுமை மா மூடையை கொண்டு செல்லும் போது ஒரு மூடைக்கு 300 ரூபா மேலதிகமாகஅறிவிடப் படுவதாகவும் குறிப்பிட்டார்.

திருகோணமலையில் இருந்து மருதானைக்கு கடந்த காலங்களில் ரயிலில் கோதுமைமா கொண்டு செல்லப்பட்டதாகவும், தற்போது ரயிலில் கோதுமை மா கொண்டு செல்வது நிறுத்தப் பட் டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# இலங்கையை உன்னிப்பாக அவதானிக்கிறது பிரிட்டன்!

## அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

லண்டன், ஒக. 03

இலங்கையில் அண்மையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்தமை உட்பட வேகமாக நகரும் நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக இங்கிலாந்து அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் இலங்கையின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார சவால்களைத் தீர்ப்பதற்கு அமைதியான, ஜனநாயக மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறையைக் கண்டறிய அனைத்துத் தரப்புகளையும், ஊக்குவிப்பதாக இங்கிலாந்து அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சட்டத்தின் ஆட்சியை மதிக்கவும், வன்முறை மற்றும் சேதங்களைத் தவிர்க்கவும் அனைத்து தரப்பினரையும் கோருவதாகவும் இங்கிலாந்தின் வெளியுறவு அமைச்சர் அமண்டா மில்லிங் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எழுத்துப் பூர்வ அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற பலதரப்பு நிறுவனங்கள் மூலம் இங்கிலாந்து பொருளாதார ஆதரவை வழங்குகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தில் ஐக்கிய இராச்சிய கூட்டு, ஐந்தாவது பெரிய பங்குகளைக் கொண்டுள்ளது. அத்துடன் ஐக்கிய நாடுகள் மற்றும் உலக வங்கிக்கும் முக்கிய பங்களிப்பாளராக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச கடன் நிறுவனங்களில் இங்கிலாந்து குறிப்பிடத்தக்க குரலைக் கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இலங்கையின் கடன் நெருக்கடிக்கு தீர்வு காண்பதில் உலக வங்கி உட்பட பலதரப்பு அமைப்புகளுடன் இங்கிலாந்து நெருக்கமாக பணியாற்றி வருவதாகவும் இங்கிலாந்தின் வெளியுறவு அமைச்சர் அமண்டா மில்லிங் குறிப்பிட்டார். (அ)

# சீரற்ற காலநிலையால் இடர் மீட்பு பணிகளில் இராணுவம்

கொழும்பு, ஒக. 03

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்லுமாறு இராணுத்தினருக்கு, இராணுவத் தளபதி ஜெனரல் விக்கும் லியனகே பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய, உலப்பனை தவத்தந்தன்ன வீதியில் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களை அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பாக வெளியேற்றும் பணியில் இலங்கை இராணுவத்தின் முதலாது படையணியின் 58 ஆவது படைப்பிரிவின் 5 ஆவது விஜயபாகு படைப்பிரிவின் படையினர் ஈடுபட்டனர்.

மேலும், மொரப்பே ரன்வந்தலாவ பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக இடம்பெயர்ந்த மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு படகு மூலம் அழைத்துச் செல்லும் பணி யையும் படையினர் மேற்கொண்டனர்.

மேலும், தியகல விதுலிபுர பிரதேசத்தில் மண்சரிவினால் உயிரிழந்த நபரின் சடலத்தை இராணுவத்தினர் கண்டு பிடித்து நாவலப்பிட்டி வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (அ)

## ரணில்...

அவரின் பெயரை பிரதிவாதியிலிருந்து நீக்குவதா? இல்லையா? என்பது தொடர்பிலான தீர்மானம் எழுவர் அடங்கிய நீதியரசர் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

வழக்கு அழைக்கப்பட்ட போது பிரதிவாதியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சார்பில் தோன்றிய சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ, பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தற்போது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதால், பிரதிவாதி என்பதில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவின் நீக்கவேண்டுமென நீதிமன்றைக் கேட்டுக்கொண்டார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் பிரகாரம், ஜனாதிபதிக்கான விடுவிப்பு சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளில் மட்டுமே உள்ளன. இது அடிப்படை உரிமை மீறல் வழக்காகும் என்பதால், பிரதிவாதியாக அவர் பெயர் இருக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதனிடையே, பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் சார்பில் நீதிமன்றத்தில் பிரசன்னமான ஜனாதிபதி சட்டத்தரணி ஷமில் பெரேரா, ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸின் கருத்துகளுக்கு இணக்குகிறார் என்றும், இதனடிப்படையில், ஜனதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கை தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் நீதியரசர்களை கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில், சட்டமா அதிபரின் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரால் பிரியந்த நவான, அரசமைப்பின் 35(1) உறுப்புரையின் கீழ், ஜனாதிபதிக்கு விடுவிப்பு உரித்துடையதாகும். அதற்கு எதிராக, பதவி நிலையிலோ அல்லது தனிப்பட்ட ரீதியிலோ வழக்கு விசாரணைகளை முன்னெடுக்க முடியாது. ஆகையால் மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டிருக்கும் ஜனாதிபதியை விடுவிக்க வேண்டும் என்றார்.

முன்வைக்கப்பட்ட காரணங்களை கவனத்தில் கொண்டு, கட்டளையை பிறப்பிப்பதை பின்னர் ஒத்திவைப்பதாக நீதிமன்றம் அறிவித்தது. (ஐ)

## 3ஆவது...

தைத் தொடர்ந்து அரசமைப்பின் 33ஆவது சரத்தின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை இன்று முற்பகல் 10.30 மணிக்கு வெளியிடுவார்.

இதற்கான ஏற்பாடுகள் மிக எளிமையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நிகழ்வில் வாகன, துப்பாக்கி அணிவகுப்பு எதுவும் இருக்காது. முப்படையினரின் அணிவகுப்பை மாத்திரம் ஜனாதிபதி ஏற்றுக்கொள்வார். அத்துடன் நிகழ்வில், ஜனாதிபதியின் கொடி ஏற்றப்படாது. தேசியக் கொடி மாத்திரம் ஏற்றப்படும். இதேபோன்று ஜனாதிபதியின் சிம்மாசனத்தில் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ சின்னத்துக்கு பதிலாக அரச சின்னம் பதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சிம்மாசன உரை நிறைவடைந்ததும் சபை ஒத்திவைக்கப்படும். தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தேநீர் விருந்தும் இடம்பெறும். (ஐ)

## பாலியல்...

கள் பாதிக்கப்பட்டருக்கு தலா 5 இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்கவும், அதனை செலுத்தத் தவறும்பட்சத்தில் இரு ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையும் அனுபவிக்க நேரிடும் என்றும் தீர்ப்பளித்தார்.

மேலும், இரு குற்றவாளிகளுக்கும் 5 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், அதனை செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலதிகமாக ஒரு மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் எனவும் உத்தரவிடப்பட்டது.

நெளுக்குளத்தில் கடந்த 2011 மே 29 ஆம் திகதி முச்சக்கர வண்டியில் பெண் ஒருவரை ஏற்றிச்சென்ற இருவர் அந்தப் பெண்ணை கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு நியாயமான காரணிகளை அரச தரப்பு சட்டத்தரணி மன்றில் முன்னிலைப்படுத்தி, குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்தார்.

இதற்கமைய, இரண்டு பிரதிவாதிகளையும் குற்றவாளிகள் என வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உறுதி செய்தார்.

இரு குற்றவாளிகளில் ஒருவரே நேற்று மன்றில் முன்னிலையாகியிருந்தார். அவருக்கான தண்டனை நேற்று முதல் நடைமுறையானது. மற்றைய குற்றவாளி இந்தியாவில் தலைமறைவாக உள்ளார். இதனால், அவரை கைது செய்வதற்கான பகிரங்க பிடியாணை உத்தரவையும் நீதிபதி பிறப்பித்தார். (ஐ)

## விக்னேஸ்வரன்...

யில் உள்ள அவரின் இல்லத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனை தெரிவித்தார்.

கடந்த காலங்களில் எழுத்து மூலம் செய்யப்பட்ட உறுதிப்பாடுகள் மனதால் இணைந்த உறுதிப்பாடுகளுக்கு என்ன நடந்தது என்பதை நாம் பார்த்தோம். தற்போதைய அரசோ நிலையற்ற அரசு. இந்த அரசால் எந்த ஒரு பிரச்னையையுமே தீர்க்க முடியாது. குறைந்தது தற்போதுள்ள பொருளாதார பிரச்னையை கூடத் தீர்க்குமா என்பதே கேள்விக்குறி.

தற்போதைய அரசும் சிங்கள - பௌத்த விடயங்களை பாதுகாக்கின்ற ஒன்றே. எழுத்து மூலமான ஒப்பந்தங்களோ வாய் மூலமான ஒப்பந்தங்களோ அவர்களை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளே அன்றி அதனால் எந்த பலனும் கிடையாது.

எமது கட்சியின் செயலாளர் நாயகம் விக்னேஸ்வரன் தற்போதைய அரசாங்கத்தில் இணைய மாட்டார் என முழுமையாக நம்புகின்றோம். ஆனால், அவர் அரசாங்கத்தில் இணைவாரா இல்லையா என்பதை உறுதியாகக் கூற முடியாமலே இருக்கின்றோம். அவர் எடுக்கும் முடிவுகள் கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடியதாகவோ அல்லது பங்காளி கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடியதாகவோ அமையவில்லை என்பது மன வருத்தத்துக்குரிய விடயம். ஆனாலும், ஒரு துரதிஷ்டமான ஒரு முடிவு ஏற்படாது என்றே நாம் நம்புகின்றோம்.

ஆனால், தன்னிச்சையான முடிவை எடுத்து ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான சர்வகட்சி அரசாங்கத்தின் அமைச்சரவையில் விக்னேஸ்வரன் அங்கம் வகித்தால் “விக்கி கோ கொழும்பு“ என்ற கோஷத்தை எழுப்பும் முதல் ஆளாக நானே இருப்பேன் - என்றார். (ஐ)

## அமைச்சரானார்...

சராக அவர் நேற்று மாலை பதவியேற்றார்.

ஜப்பான் நாட்டின் நிறுவனத்திடம் லஞ்சம் கோரினார் என்ற குற்றச்சாட்டு காரணமாக முன்னதாக அவர் அமைச்சர் பதவியில் இருந்து விலகினார். அத்துடன், விசாரணை நடத்துமாறும் கோரியிருந்தார்.

குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட, ஓய்வு பெற்ற நீதிபதி குசலா சரோஜினியின் தலைமையிலான குழுவால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் நிமால் சிறிபால டீ சில்வா அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# தேசிய பிரச்னைகளை தீர்க்க கூட்டமைப்பு ஒத்துழைக்கும்!

## ஜனாதிபதிக்கு சம்பந்தன் கடிதம்

கொழும்பு, ஓகஸ்ட் 03

நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்து அரசியல், சமூகம், கலாசாரம் மற்றும் பொருளாதார ரீதியில் பிரச்னைகளை எதிர்கொள்கிறது. இவை தீர்க்கப்பட வேண்டும். இதற்கான ஒத்துழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கும் என்று அந்தக் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கம் அமைக்க ஆதரவு, நாட்டில் உறுதியான பொருளாதார, சமூக நிலைத்தன்மையை ஏற்படுத்துவதற்கு ஆதரவு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடிதம் அனுப்பினார்.

இந்தக் கடிதத்துக்கு பதில் அளித்து இரா. சம்பந்தன் கடந்த முதலாம் திகதி கடிதம் அனுப்பினார். அதில்,

சர்வ கட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்கும் - செயல்படுத்துவதற்கும் நாங்கள் எங்கள் முழுமையான ஆதரவை வழங்குவோம். நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்து அரசியல், சமூகம், கலாசாரம் மற்றும் பொருளாதாரம் எனப் பல பிரச்னைகளை எதிர்கொண்டுள்ளது. அனைத்து தேசிய பிரச்னைகளும் தீர்க்கப்பட வேண்டும். இதற்கு நாம் பங்களிபோம்”, என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# நுவரெலியாவில் வெள்ளம் மூவர் மரணம் மூவர் மாயம்!

நுவரெலியா, ஓக. 03

நுவரெலியாவில் கடந்த இரு நாட்களாகப் பெய்துவரும் கடும் மழை, காற்று மற்றும் மண்சரிவில் சிக்கி மூவர் பலியாகினர். மூன்று பேரை காணவில்லை என்று அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் தெரிவித்தது.

இதேசமயம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நிலவும் மோசமான வானிலையால் நேற்றுவரை 7 ஆயிரத் துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்ட பெரும் வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி மூவர் உயிரிழந்தனர். மூவரை காணவில்லை. வெள்ளத்தால் இரத்தினபுரி மாவட்டமும் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கொரோனா பலி...

பட்டவர்களில் 3 ஆண்களும் இரு பெண்களுமாக 7 பேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மரணங்களுடன் நாட்டில் தொற்றால் இறந்தோரின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 566ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் அண்மை நாட்களாக கொரோனா தொற்று அதிகரித்து வருவதுடன், உயிரிழப்பும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கூட்டமைப்பு, ஐ.ம...

பொருளாதார நெருக்கடி தீர்வு என்பவை குறித்தே பிரதானமாக பேசப்படவுள்ளது. ஆனாலும், தமிழ் மக்களின் பிரச்னைகள் குறித்தும் பேசப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கூட்டமைப்பு...

கட்சி அரசு நிறுவப்பட வேண்டும் எனவும், அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு ஆதரவு வழங்கும் என்றும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ள கருத்து அனைவராலும் வரவேற்கத்தக்கது.

ஆனால், ஜனாதிபதி தலைமையில் அமையவுள்ள சர்வகட்சி அரசுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியில் இருந்து ஆதரவு மாத்திரம் வழங்காமல் அதில் பங்காளியாக இணைய வேண்டும். அப்போதுதான் தீர்வுக்காகக் காத்திருக்கும் மக்களுக்குச் சேவையாற்ற முடியும்” - என்றார்.

இதேவேளை, சர்வகட்சி அரசில் இணைவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சி ரீதியான முடிவு விரைவில் எடுக்கப்படும் என்று அதன் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நல்லூர்...

பதுடன் அல்லது பாதுகாப்பாக வீட்டைப் பூட்டி ஆலயத்துக்குச் செல்லுமாறு யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 25 நாள்கள் திருவிழா மற்றும் திருக்கல்யாணம், வைரவர் சாந்தி என 27 நாள்கள் ஆலயத்தில் அடியவர்கள் பெருந்திரளாகப் பங்கேற்பர்.

வழமைபோன்று சீருடை மற்றும் சிவில் உடையில் பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். எனினும், திருடர்கள் மற்றும் கொள்ளையர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆலயத்துக்கு வருகை தரும் அடியவர்கள் தமது தங்க நகைகள் மற்றும் பணத்தை பாதுகாப்பாக வைத்திருக்குமாறு யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். இயன்றளவும் நகைகளை அணிவதைக் குறைப்பதுடன் பணத்தை எடுத்துவருவதைத் தவிர்க்குமாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## வெள்ளி...

அவர் மேலும் கூறுகையில்-

அண்மைய நாட்களில் நிலவிய போக்குவரத்து நெருக்கடி காரணமாக வெள்ளிக்கிழமையை அரச அலுவலகங்களுக்கான விடுமுறை தினமாக அறிவித்து பொது நிர்வாக அமைச்சால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

எனினும், தற்போது, பொதுப்போக்குவரத்துப் படிப்படியாக வழமைக்குத் திரும்பி வருகின்றது.

போக்குவரத்திலிருந்து விலகியிருந்த 800 பஸ்களை இலங்கை போக்குவரத்துச் சபை மீளச் சேவையில் இணைத்துள்ளது.

அத்துடன், வெற்றிகரமான முறையில் கியூ.ஆர். முறைமையின் கீழ் எரிபொருள் வழங்கப்படுகின்றது.

எனவே, இந்த விடயங்களைக் கருத்தில்கொண்டு, பொது நிர்வாக அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை இரத்துச் செய்யுமாறு, பொது நிர்வாக அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் வாரம் முதல் வெள்ளிக்கிழமைகளில் அரச அலுவலகங்கள் வழமைபோல் இயங்கும் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu



# முன்னாள் நிதி அமைச்சர் ரவி மன்னாருக்குத் திடீர் விஜயம்!

கொழும்பு, ஓக. 03

முன்னாள் நிதி அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தருமான ரவி கருணாநாயக்க நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னாருக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

விசேட உலங்குவானூர்தி மூலம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தார்.

மன்னாரிற்கான திடீர் விஜயம் குறித்து முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போது எவ்வித பதிலும் கூறாமல் அவ்விடத்தில் வந்த வாகனத்தில் ஏறிச் சென்று விட்டார்.

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க வுடன் ரி.எஸ்.ஜி என அழைக்கப்படும் தனியார் கடல் உணவு உற்பத்தி நிலையப் பிரதிநிதிகளும் வருகை தந்த நிலையில் அவர்களின் வாகனத்திலேயே அவர் சென் றதை அவதானிக்க முடிந்தது. (அ)












# நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஓக. 03

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசு வாமி ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா நேற்று முற்பகல் 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நேற்று காலை 9மணி முதல் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகி, முற்பகல் 10 மணிக்கு அந்தண சிவாச்சாரியர்களின் வேத மந்திரங்கள் இசைக்க தவில்நாதஸ்வரம் ஒலிக்க, பக்தர்களின் அரோகரா கோசத்துடன் கொடியேற்றம் இடம்பெற்றது.

தொடர்ந்து 25 நாட்கள் மகோற்சவம் இடம்பெறவுள்ளது. மஞ்சத்திருவிழா எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது. எதிர்வரும் 18 ஆம் திகதி அருணகிரிநாதர் உற்சவமும், 19ஆம் திகதி வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா கார்த்திகை உற்சவமும் 24 ஆம் திகதி மாலை சப்பறத் திருவிழாவும், 25 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 26 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம் பெற்று அன்றைய தினம் மாலை கொடி யிறக்கம் இடம்பெறவுள்ளது. (அ)

## மரண அறிவித்தல்

# கந்தசாமி விஜயரத்தினம்



**தோற்றம்**
**13.04.1959**

**மறைவு**
**28.07.2022**

வேலணையைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி விஜயரத்தினம் அவர்கள் 28.07.2022 வியாழக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தசாமி நகுலேஸ் வரி தம்பதிகளின் அன்பு மகனும், சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரவேலு முத்தையா, யோகசுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகனும்,கலைச்செல்வி அவர்களின் அன்புக் கணவரும்,மயூரன், விதுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவமலர் (கொழும்பு), சிவமலர் (வேலணை), காலஞ்சென்ற கிருபரத்தினம், சோதிமலர்(கனடா), சிங்கரத்தினம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற கனகரத் தினம், உதயகுமார் (வேலணை), கலாராணி(இந்தியா), சிவபூஷணம் (கனடா), தேவ மாலா (லண்டன்), கலாரஞ்சிதம் (கொழும்பு), சாந்தினி (தென் ஆப்ரிக்கா), நந்தினி (கனடா), ஞானவேல் (லண்டன்), ஜெயந்தினி (லண்டன்), வேல்விழி (சுவிஸ்), கதிர்வேல் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு
Wednesday, 03 Aug 2022 5:00 PM - 9:00 PM
Thursday, 04 Aug 2022 8:00 AM - 10:00 AM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada

கிரியை
Thursday, 04 Aug 2022 10:00 AM - 12:00 PM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada

தகனம்
Thursday, 04 Aug 2022 12:00 PM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**கலைச்செல்வி - மனைவி** Mobile : +16477210838
**சோதிமலர் - சகோதரி** Mobile : +14167285284
**மயூரன் - மகன்** Mobile : +16474666652
**ஞானவேல் - மைத்துனர்** Mobile : +447921841925

தகவல்:
**ஞானவேல் - மைத்துனர்.**

## நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த திருவிழாவையொட்டி
# ஓம் ரிவி நடாத்தும்

# சைவம் தழைத்தோங்க....
## சமய அறிவுப் போட்டி

நல்லூர் உற்சவகாலத்தை ஒட்டி டான் குழுமத்தின் ஓம் தொலைக்காட்சியால் சைவம் தழைத்தோங்க.... என்ற தொனிப்பொருளிலான நிகழ்வுகள் இவ்வாண்டும் முன்னெடுக்கப்படவுள்ளன. பாடசாலை மாணவர்களின் சைவசமய அறிவை மேம்படுத்தும் நோக்குடன் இவ்வாண்டு 'சைவக்களஞ்சியம்' என்ற தலைப்பிலான – சமய அறிவுப் போட்டி முன்னெடுக்கப்படவுள்ளது.





**செந்தமிழ் சொல்லருவி**
**ச. லலீசன் நடாத்தும்**
**சமய அறிவுப்போட்டி**
**ஆலய வடகிழக்கு வீதியில்**
**அமைந்திருக்கும்**
**நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் தினமும்**
**மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்.**

## போட்டி தொடர்பான விதி முறைகள்

பாடசாலை மாணவர் மாத்திரமே போட்டியில் பங்கேற்கலாம்.

கேள்விகள் சைவசமய அறிவு சார்ந்த விடயங்களாகவும் பொதுவான அறிகை சார்ந்ததாகவும் இருக்கும்

வினாக்கள் பெரும்பாலும் தரம் 06 – தரம் 11 சைவநெறி பாடநூலை மையப்படுத்தியதாக அமையும்.

விடை வழங்குவதற்கு 10 செக்கன்கள் அவகாசம் வழங்கப்படும்.

நடுவரின் தீர்ப்பே இறுதியானது

போட்டிகளில் பங்கு கொள்ளவிரும்பும் மாணவர்கள் நிகழ்ச்சி நடைபெறும் மண்டபத்திற்கு நேரடியாக வந்து கலந்துகொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு: 075 3132 804**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.